வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=


# ஈழநாடு

Eelanadu

வீர மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 245 | பக்கங்கள் : 16



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் பெருந்திருவிழாவின் சப்பை ரதத் திருவிழா நேற்று நடைபெற்றபோது.... (படம்: சிவசாந்தன்)

# காணாமல் போனவர்கள் 6,047 பேர் மாத்திரமேதான்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

- உள்நாட்டு பொறிமுறையிலேயே தீர்வு
- மேற்குலகு கூறும் தகவல் வெறும் குப்பை
- 15 வருடங்கள் என்பது நீண்டகாலமல்லவாம்



கொழும்பு, செப்ரம்பர் 01

2000-2009 ஆம் ஆண்டு பகுதியில் 6 ஆயிரத்து 47 பேரே காணாமல்போயுள்ளனர். ஒரு இலட்சம் என்று கூறுவது வெறும் குப்பை - மேற்குலகின் முட்டாள்தனம் என்று விசனம் தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

ஜேர்மனியின் டிடபிள்யூ ஊடகத்துக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அலி சப்ரி அளித்த அந்த நேர்காணலில்

"நாங்கள் தமிழ் சமூகத்துடன் போர் புரியவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத அமைப்புக்கு எதிராக போராடினோம். இந்த அமைப்பு இரண்டு தலைவர்களை அழித்தது - ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, பல அமைச்சர்கள், தமிழ் தலைவர்களை கொன்றது. நாம் அவர்களுக்கு எதிராக போரிட வேண்டும் - அவர்களின் 15

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முதல் அமர்விலேயே இலங்கை விடயம்

## செப்ரெம்பர் 9ஆம் திகதி ஆராயப்படும்

ஜெனிவா, செப். 01

ஜெனிவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது அமர்வு செப்ரெம்பர் 9 இல் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில் அன்றைய தினமே இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

அமர்வின் நிகழ்ச்சி இலக்கம் 2 இன் கீழ் இலங்கை விவகாரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15

# அமைச்சர் அலி சப்ரியின் கருத்து தவறாக வழிநடத்தும் நடவடிக்கை

## ஆய்வாளர் அலன் கீனன்



லண்டன், செப். 01

6 ஆயிரத்து 47 பேர் மாத்திரமே காணாமல் போயுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருப்பது தவறாக வழிநடத்தும் நடவடிக்கை என்று சர்வதேச நெருக்கடி குழுவின் இலங்கை குறித்த ஆய்வாளர் அலன் கீனன் தெரி வித்துள்ளார்.

ஜேர்மனி ஊடகத்துக்கு அமைச்சர் அலி சப்ரி வழங்கிய நேர்காணலில் "2000 - 2009 வரையில் தங்கள் 15

# நல்லூரானுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், செப். 01

உலகப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6.15 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்த சுவாமி ஆலய பெருந்திருவிழா 15

# பதில்களை அறிவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உண்டு

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



கொழும்பு, செப். 01

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களுக்குரிய பதில்களை அறிந்துகொள்வதற்கும், பொறுப்புக்கூறலைப் பெறுவதற்குமான உரித்தைக் கொண்டிருக்கிறார்கள் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். 15

# இளம்பெண்ணின் உயிரை பறித்த மீற்றர் வட்டி கடன்!

யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியில் மீற்றர் வட்டிக்கு கடன் பெற்ற இளம் குடும்பப் பெண்ணொருவர் கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியில் 2 பிள்ளைகளின் தாயான 28 வயதுடைய சயந்தன் கேதீசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் மீற்றர் வட்டிக்கு கடன் பெற்று 15

# வாக்காளர் அட்டை விநியோகம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்

கொழும்பு, செப். 01

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப் படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு சுமார் 8000 பேரை பணியில் அமர்த்த எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க கூறினார். 15

# காட்டு யானை தாக்கியதில் வவுனியாவில் பெண் மரணம்!

வவுனியா, செப். 01

வவுனியா பிரப்பமடு பகுயில் நேற்று பிற்பகல் வேலையில் பெண் ஒருவரை யானை தாக்கியதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்

வவுனியா மாமடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரப்ப மடுப் பகுதியில் வசிக்கும் 55 வயதுடைய பெண் ஒருவர் நேற்று பிற்பகல் தனது மாடுகளை 15

# நாணய நிதிய உடன்பாடிக்கைக்கு ஆட்சி மாற்றத்தால் பாதிப்பில்லை!

## அடித்து சொல்கிறார் அநுரகுமார

கொழும்பு, செப். 01

ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் விசேட திருவிழா:

# போக்குவரத்து ஒழுங்குமுறை குறித்து மாநகர ஆணையருக்கு சிபாரிசு கடிதம்!

யாழ்ப்பாணம், செப். 01

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா காலத்தில் பக்தர்களின் நலன்கருதி முன்னெடுக்கப்படவேண்டிய போக்குவரத்து ஒழுங்குமுறைகள் தொடர்பில் யாழ். மாவட்டபதில் மாவட்ட செயலாளர் யாழ்ப்பாண மாநகர ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிள்ளார்.

அதில், அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட களப்பயணத்துக்கு அமைவாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் தங்களுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலுக்கு அமைவாகவும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் விசேட திருவிழா தினங்களான நாளை திங்கட்கிழமை வரை அனர்த்த முன்னாயத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக பின்வரும் விடயங்களை அமுலாக்க சிபாரிசு செய்யப்படுகின்றது.

கோயில் வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து கைலாச பிள்ளையார் கோயில்வரை உள்ள கோவில் வீதியை கோயிலிலிருந்து மக்கள் வெளிச்செல்லுகின்ற ஒருவழி பாதையாக மட்டும் பயன்படுத்துதல்.

இவ்வாறு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவசர வெளியேற்று பாதையாக மேற்படி பாதையை பயன்படுத்த முடியும். இதனால் அவசர தேவை கருதி வெளியேற்றப்பட வேண்டியவர்களை வெளியேற்றுவது இலகுவானதாக காணப்படும். மேலும் மேற்படி விடயத்தை முற்கூட்டியே தகவல் தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தலை வழங்குதல்.

ஆலயத்தின் பின்புறமாக ஒருவர் மட்டும் செல்லக்கூடியதாக மூடப்பட்டுள்ள பருத்தித்துறை வீதியை குறித்த தினங்களில் முழுமையாக மக்கள் பாவனைக்காக திறந்துவிடுவதன் மூலம் மக்கள் நெருக்கடியை குறைக்கமுடியும்.

மேற்படி நடைமுறைகளை விசேட திருவிழாக்களான சப்பைரதம், தேர் மற்றும் தீர்த்த திருவிழாக்களின்போது நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஆலய சூழலில் அனர்த்தம் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள முடியும் - என்றுள்ளது. (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், செப். 01

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேவார இசைமணி எஸ். சண்முகராஜா குழுவினரின் பஜனை நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், செப். 01


நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் ஆதீனகுரு சிவசிறீ கைலாசநாத வாமதேக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாணம் வடக்கு வலய பிரதிப் பதிவாளர் நாயகம் கணபதிப்பிள்ளை நடராஜா சிறப்பு அதிதியாகவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி சின்னத்தம்பி பத்மராஜா, யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலய அதிபர் கந்தசாமி சசிகரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்கின்றனர்.

இதில், அரியாலை சிறீ ஞான வைரவர் அறநெறி பாடசாலை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அறநெறி பாடசாலை, சிறீ கணேசா அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக ஏ. ஜி. எஸ். சுவாமிநாத சர்மா இசை அர்ச்சனை அக்கடமி குழுவினர் வழங்கும் கர்நாடக இசை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)



# மட்டக்களப்பில் நேற்று விழிப்புணர்வு பேரணி!

மட்டக்களப்பு, செப். 01

இளைஞர்களுக்கு டிஜிற்றல் பாதைகள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனியும் வீதி நாடகமும் நேற்று மட்டக்களப்பு - சித்தாண்டியில் நடைபெற்றன.

உலக வாலிபர் தினத்தையொட்டி , அரோமா சிறுவர் அபிவிருத்தி நிலையம் முறக்கொட்டாஞ்சேனை பரிபவுல் ஆலயத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

"இளைஞர்களே டிஜிற்றல் பாதைகள் தொடர்பில் அறிந்திருங்கள் எனும் தொனிப் பொருளில், முறக்கொட்டாஞ்சேனை - அரோமா சிறுவர் அபிவிருத்தி நிலையம் முன் ஆரம்பமான பேரணி சித்தாண்டி பிரதான வீதி வழியாக சென்று பொதுச் சந்தையை அடைந்து அங்கிருந்து மீண்டும் சித்தாண்டி சந்தியை வந்தடைந்தது.

பேரணியைத் தொடர்ந்து சித்தாண்டி சந்தியில் விழிப்புணர்வு நாடகமும் ஆலய வாலிபர்களால் நிகழ்த்தப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தல் 1,482 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 01

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை நேற்று முன்தினம் நள்ளிரவு வரை ஆயிரத்து 482 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 612 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 807 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 7 முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 56 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மனைவியை கொன்ற இலங்கையருக்கு மறியல்

## ஆஸி. நீதிமன்றம் விதித்தது

மெல்பர்ன், செப். 01

அவுஸ்திரேலியாவில் தமது மனைவியை இலங்கையர் ஒருவர் கொலை செய்தமை உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மெல்பர்னில் 2022 டிசெம்பர் 3ஆம் திகதி இலங்கைப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார். அவரின் கணவரான இலங்கையை சேர்ந்த தினேஷ் குரேரா என்பவர் ஆயுதம் ஒன்றால் அவரை தாக்கிக் கொலை செய்துள்ளார்.

வழக்கில், தாம் கொலை செய்யவில்லை என்றும் தற்காப்புக்காகவே அவரை தாக்கினார் எனவும் குறித்த இலங்கையர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அவர் கொலை செய்தமை உயர் நீதிமன்ற விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரை விலகக் கோரி தீர்மானம்!

## ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, செப். 01

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன விலக வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் சபை ஒருமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கூடி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன பணத்தைத் தவறான முறையில் பயன்படுத்தினார் என்று எழுந்த குற்றச்சாட்டுக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் 2023ஆம் ஆண்டின் இறுதியில் ஊழலுக்கு எதிரான திட்டம் ஒன்றுக்கான விலைமனுக்களை கோரியிருந்தது. இதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சமர்ப்பித்த பின்னர், சங்கத்துக்கு 2.4 கோடி ரூபாய் நிதி கிடைத்தது. ஏலம் எடுப்பதிலும் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதிலும் வெளிப்படைத்தன்மையின்றி செயல்பட்டமை தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்யா நவரத்ன, உப தலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ, ஜனாதிபதி சட்டத்தரணி ஷவீந்திர பெர்னாண்டோ, சட்டத்தரணி நுவான் டி அல்விஸ் மற்றும் சட்டத்தரணி ரஷ்மினி இந்ததிஸ்ஸ ஆகியோர் ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஐ)

# உயிரிழந்த யானையை வெட்டி எரித்தவர் கைது

கொழும்பு, செப். 01

காட்டு யானையை எரியூட்டி புதைத்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் குருநாகல் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மின்சார வேலியில் சிக்குண்டு, குறித்த யானை சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிக்கவரெட்டிய பகுதியில் உயிரிழந்த குறித்த யானையை காணியின் உரிமையாளர் எவருக்கும் தெரிவிக்காமல் வெட்டி, எரியூட்டி புதைத்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

இந்தநிலையில் கைதானவருக்கு எதிராக, சட்டவிரோதமாக பொறிகளைப் பயன்படுத்தியமை, வனவிலங்கு கொலை மற்றும் கொலையை மறைத்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த காட்டு யானை 7 முதல் 8 அடி உயரமுடையதாக இருக்கலாம் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக் கைதிகளில் 331 பேர் பட்டதாரிகள்!

## ஆய்வில் தகவல்

கொழும்பு, செப். 01

**நாட்டின் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் 331 பட்டதாரிகள் இருக்கின்றனர் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.**

இவர்களில் 66 பேர் சிறை தண்டனை விதிக்கப்பட்டவர்கள். 256 பேர் விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 2023 வரையான காலப்பகுதிக்குள் சிறைச்சாலையில் ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 56 கைதிகள் இருந்துள்ளனர். இவர்களில் 14 ஆயிரத்து 952 பேர் உயர்தரம் பயின்றவர்கள்.

இது தவிர, சாதாரண தர பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களில் 44 ஆயிரத்து 614 பேரும், எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களில் 64 ஆயிரத்து 684 பேரும், ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களில் 34 ஆயிரத்து 673 பேரும், 1-5 தரத்தில் தேர்ச்சி பெற்றவர்களில் 20 ஆயிரத்து 188 பேரும் கைதிகளாக உள்ளனர்.

இதேவேளை, பாடசாலைகளுக்கு செல்லாத 5 ஆயிரத்து 370 கைதிகள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உடற்கலங்களுக்குள் குருதி சென்றதால் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 01

உடற்கலங்களுக்குள் குருதி சென்றதால் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார்.

பதுளையை பிறப்பிடமாகவும், பாரதி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட - வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பெரியசாமி திவாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு கடந்த வியாழக்கிழமை இரத்த வாந்தி ஏற்பட்டது. இதனால் மூளாய் கூட்டுறவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவரின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

ஈரலில் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் உடற்கலங்களுக்குள் குருதி சென்றமையால் இந்த மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்தது. (ஐ)



# ஒஸ்மானியா கல்லூரியில் சாரணர் சின்னம் சூட்டல்!

யாழ்ப்பாணம், செப். 01

யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் குருளை சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஜனாப் என். ஷாபி தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பதில் மாவட்ட செயலாளரும் யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளருமான ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக உதவி சாரணர் ஆணையாளர் திருமதி பி. அருள்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், அயல் பாடசாலை சாரணர்கள், பொறுப்பாசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி லண்டனில் போராட்டம்!

லண்டன், செப். 01

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி லண்டனிலும் நேற்று முன்தினம் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அன்றைய தினம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் தாயகத்தில் நடத்தப்பட்ட போராட்டங்களுக்கு ஆதரவாகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான புலம்பெயர்




லண்டன் வாழ் உறவுகள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் "பலவந்தவமாக மறைத்து வைத்திருக்கப்படும் காணாமலாக்கப்பட்ட உறவுகள் எங்கே?", "இனப் படுகொலையாளியை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்து", போன்ற கோஷங்களை போராட்டத்தில் எழுப்பினர். (ஐ)

# இராணுவத் தளங்களுக்கான போர்க்களம் அல்ல இலங்கை!

## வெளிவிவகார அமைச்சர் விசனம்

கொழும்பு, செப். 01

இலங்கை இராணுவத் தளங்களுக்கான போர்க்களம் அல்ல என்று விசனம் தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் மூலோபாய நிலை மற்றும் இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவின் போட்டியிடும் நலன்கள் பற்றிய கவலைகளை வெளிப்படுத்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டின் கூட்டாண்மை முதன்மையாக வணிக ரீதியானது, இராணுவப் பயிற்சிகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், நிரந்தர இராணுவ இருப்பு அனுமதிக்கப்படவில்லை. இலங்கை தனது இறையாண்மையை பேணுவதுடன் வர்த்தகத்துக்காக திறந்த நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

சீன நீர்மூழ்கி கப்பல்கள் தொடர்பான இந்தியாவின் கவலைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, இராணுவ கப்பல்களைக் கையாள்வதற்கு வெளிப்படையான பொறிமுறையை கொண்டுள்ளது. அனைத்து நாடுகளுக்குமான பொதுப் பாதைக்குரிய சுதந்திரத்தை ஊக்குவிக்கும் வகையில், அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் கப்பல்களை இலங்கை வரவேற்கிறது என்று சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பாராளுமன்ற தேர்தலை நடத்த வாய்ப்பு அதிகம்!

கொழும்பு, செப். 01

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து 66 நாட்களுக்கு பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படும் ஜனாதிபதி தனக்குப் பொருத்தமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை என்று கருதினால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர் கூட்டிக்காட்டினார்.

அவ்வாறு நடந்தால் ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்பட்டு 66 நாட்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் என சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார். (ஐ)

# 11 கோடி ரூபாய் பெறுமதியான கொக்கைனுடன் பெண் கைது!

கொழும்பு, செப். 01

சுமார் 11 கோடி ரூபாய் பெறுமதியான - 3 கிலோ கொக்கைன் போதைப்பொருளுடன் மலேசிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதான குறித்த பெண் போதைப்பொருளை விற்பனை செய்ய முயன்ற நிலையில் கொழும்பு - பெல்லன்வில பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்கைன் போதைப் பொருளை கப்ஸ்யூல் மாத்திரைக்குள் நிரப்பி இனிப்பு பொதிகளுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கங்கொடவில நீதிமன்றத்தில் குறித்த பெண்ணை முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சட்டவிரோதமாக பிடித்த மீன்களுடன் ஒருவர் கைது

திருகோணமலை, செப். 01

நிலாவெளி கடற்கரை பகுதியில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனை செய்ய முயன்ற நபரொருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 72 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 1,865 கிலோ மீன்கள் கைப்பற்றப்பட்டன.

கைதானவர் 39 வயதுடைய நிலாவெளி பகுதியில் வசிப்பவர் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜே. பி. ஆதரவாளர்கள்மீது மாத்தளையில் தாக்குதல்!

கொழும்பு, செப். 01

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தேசிய மக்கள் சக்தியினர் (ஜே. வி. பி.) மீது மாத்தளையில் தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளையில் பலகடுவ பிரதேசத்தில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தவர்கள்மீதே 88/89 (ஜே. வி. பி போராட்டகாலம்) காலப்பகுதி நினை விருக்கிறதா? என்று கேட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பெண் ஒருவர் உட்பட நால்வர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் ரோஹன கமகே தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவின் தவறான கொள்கையை அமுலாக்க சஜித்தும் அநுரவும் முயற்சி

## ஜனாதிபதி ரணில் சாடல்



கொழும்பு, செப். 01

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடைமுறைப்படுத்திய தவறான பொருளாதார கொள்கையை சஜித்தும் அநுரவும் முன்னெடுக்கத் தயாராகி வருகின்றனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கடந்த இரண்டு வருட காலத்தில் சிரமப்பட்டு முன்னெடுத்துச் சென்ற பொருளாதாரத்தை பாதுகாத்து, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்கவே இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

மொனராகலையில் நடந்த தேர்தல் பரப்புரை கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். மேலும், "ஜே.வி.பி.யிடமோ ஐக்கிய மக்கள் சக்தியிடமோ நாட்டின் முன்னேற்றத்துக்கான திட்டம் இல்லை. அதனால் வாழ்க்கைச் செலவை குறைக்க வரியை குறைப்போம் என்கின்றனர். அப்படிச் செய்தால் அரசாங்க வருமானம் குறையும். அவ்வாறு செய்துவிட்டு பழைய நிலைக்கே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும்.

கோட்டாபய ஜனாதிபதியும் அதனையே செய்தார். சஜித்தும் அநுரவும் அதனையே செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். அப்படியாயின், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்தது அர்த்தமற்றதாகிவிடும்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் பொருளாதாரம் வலுவடைந்ததால் மக்களுக்கு ஓரளவு சலுகை வழங்கினோம். அதனால் அரச ஊழியர்களுக்கு 10 சம்பள அதிகரிப்பை இரண்டு கட்டங்களின் கீழ் வழங்கினோம். உதய செனவிரத்ன அறிக்கையின் பிரகாரம் அடுத்த ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது. நிதி இருப்பதால் அதனை செய்கிறோம். வறுமையான மக்களுக்கும் நாம் சலுகை வழங்குகிறோம். பொய் வாக்குறுதிகளை நான் ஒருபோதும் சொல்லமாட்டேன்.

நாட்டில் வளர்ச்சி ஏற்படும் போது சம்பளம் அதிகரிக்கும். பொருட்களின் விலையும் குறையும். 2025 - 2026 எவ்வாறு சலுகை கிடைக்கும் என்பதை பொறுத்திருந்து பாருங்கள். 2026 இறுதி காலாண்டில் சலுகைகள் அதிகளவில் கிடைக்கும். நாட்டை முன்னோக்கி நகர்த்த செப்ரெம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது தண்ணீரும் இருக்காது", என்றார். (ஐ)



# சர்வஜன பலய கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீடு!

கொழும்பு, செப். 01

சர்வஜன பலய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரபல வர்த்தகர் திலித் ஜயவீரவின் தேர்தல் அறிக்கை நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்டது.

மகிழ்ச்சியான தேசத்தை நோக்கிய தேசிய மூலோபாய திட்டம் என்ற தொனிப்பொருளில் அவர் தனது தேர்தல் அறிக்கையை கொழும்பு - சிறீ ஜெயவர்த்தனபுரவில் மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் வைத்து வெளியிட்டார்.

பொது மக்களின் கருத்துக்களால் உருவாக்கப்பட்ட இந்தத் தேர்தல் அறிக்கை இலங்கையின் முதலாவது தேசிய மூலோபாய திட்டம் என்று சர்வஜன பலய கட்சி குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# அரசு முன்னெடுத்துவரும் திட்டங்களே அநுரவின் தேர்தல் அறிக்கையிலுள்ளன

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது



கொழும்பு, செப். 01

அரசாங்கம் செய்துள்ள மற்றும் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களையே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசிய கட்சி கூறியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர். இந்த மூன்று தேர்தல் விஞ்ஞாபனங்களையும் ஒப்பிட்டு பார்க்கையில், எதிர்வரும் 5 வருடங்களில் நாட்டை முன்னேற்றுவதற்கு செய்யவேண்டிய - செய்ய முடியுமான வேலைத்திட்டங்களை இயலும் இலங்கை எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சகலருக்கும் வெற்றி எனும் தொனிப்பொருளில் 5 வருட திட்டம் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தின் வேலைத்திட்டங்கள் அனைத்தையும் தான் செய்வதாகவே சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருக்கிறார். அதனால் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் தோல்வியடைந்தால் நாடு தோல்வியடைந்து வீழ்ச்சியடையும். சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் தோல்வியடைந்தால் சஜித் பிரேமதாஸ தோல்வியடைந்து யால காட்டுக்கு சென்றுவிடுவார்.

இதேநேரம் அநுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள புதிய விடயம் தான், பல்கலைக்கழகங்களில் இடம் பெறும் பகிடிவதைகளை நிறுத்து வதற்கு நடவடிக்கை எடுப்போம் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனை அவர்கள் செய்வார்கள். ஏனெனில், பல்கலைக்கழகங்களில் இடம் பெறும் பகிடிவதைகள் அனைத்தும் மக்கள் விடுதலை முன்னணியே மேற்கொள்கிறது. அதனால் அதனை அவர்களால் நிறுத்த முடியும் என நம்புகிறோம். மேலும், அவர்களின் கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஏனைய விடயங்கள் பெரும்பாலும் அரசாங்கத்தால் செய்து முடித்துள்ள வேலைத்திட்டங்கள் அல்லது அரசாங்கம் முன்னெடுக்க இருக்கும் வேலைத் திட்டங்களாகும் - என்றார். (ஐ)

# வடக்கிலும் தெற்கிலும் பிரச்னைகள் ஒன்றேதான்!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, செப். 01

வடக்கில் உள்ள பிரச்னைகள்தான் தெற்கிலும் உள்ளன. நாடு என்ற ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுத்தால் வடக்கு மக்களின் பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைக்கும். நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை வகுக்கமாட்டோம் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பியகமவில் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழிலின்மை பிரச்னை தற்போது தீவிரமடைந்துள்ளது. எதிர்வரும் ஐந்து ஆண்டுகளின் 10 இலட்சம் தொழில் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவோம். அதற்கான திட்டங்களை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆரம்பிப்போம். தேசிய மட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவோம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் பற்றி பொய்யுரைக்க வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்போம் - முடியாததை முடியாது என்போம். வடக்கில் உள்ள பிரச்னைகள் தான் தெற்கிலும் உள்ளன. நாடு என்ற ரீதியில் சிந்தித்து சிறந்த தீர்மானத்தை எடுத்தால் வடக்கு மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம். அப்போது அரசியல்வாதிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காமல் போகும்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஒருமித்த தன்மையில் உள்ளன. அதிகார பகிர்வு, தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தல், இறக்குமதி பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை நாங்கள் வகுக்க போவதில்லை - என்றார். (ஐ)

# ரணிலின் பிரசாரத்துக்காக யாழில் பணிமனை திறப்பு

யாழ்ப்பாணம், செப். 01

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் "இயலும் இலங்கை" யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் செயல்பாட்டு பணிமனை நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கொக்குவில் - தாவடியில் இந்தப் பணிமனையை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் 11 தேர்தல் தொகுதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்துக்கு இந்தப் பணிமனை பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆட்சி முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதே எமது இலக்கு!

## ஜே. வி. பி. சொல்கிறது



கொழும்பு, செப். 01

தேர்தல் வெற்றியை விடவும் ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டு வருவதே தமது இலக்கு என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவின் வெற்றியை உறுதி செய்வதற்கு மக்கள் ஒன்றிணைந்துள்ளனர். நாட்டை பொருளாதாரத்தில் மட்டுமன்றி சட்டம், கலாசாரம் உள்ளிட்ட ஏனைய விடயங்களிலும் செழிப்படைய செய்ய வேண்டும்.

இன, மத பேதமற்ற நாட்டை உருவாக்க வேண்டியது அவசியமானது. அரசியல்வாதிகளின் அதிகாரத்தை பலப்படுத்த பொலிஸார் பயன்படுத்தப்படுகின்றனர். இந்த முறையில் மாற்றம் செய்யப்படும். தேர்தல் வெற்றியை விடவும் ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டு வருவதே எமது இலக்கு - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசு கட்சியின் முடிவு


திருகோணமலை தமிழ் அரசு கட்சியின் முடிவைத் தொடர்ந்து, கிளிநொச்சி தமிழ் அரசு கட்சிக் கிளையும் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றது. திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் மீது, கட்சியின் உறுப்பினர்கள் ஏற்படுத்திய அழுத்தங்களின் காரணமாகவே திருகோணமலையிலிருந்து இவ்வாறானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவர் தேர்விற்கான போட்டியில் எவரும் எதிர்பாராத வகையில், கிழக்கு மாகாண தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரனுக்கு ஆதரவாக பெருமளவில் ஆதரவளித்திருந்தனர். ஒப்பீட்டடிப்படையில் கிழக்கு மாகாணத்துடன் சுமந்திரன் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கின்றார் எனினும் தமிழ் தேசிய நிலைப்பாட்டில் சுமந்திரனின் அணுகுமுறையின் மீது அதிருப்தியடைந்த கிழக்கு மாகாண உறுப்பினர்கள் பெருமளவில் சிறிதரனை ஆதரித்திருந்தனர்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை சுமந்திரன் எதிர்த்து வருகின்றார் - மறுபுறம் சிறிதரன் ஆதரித்து வருகின்றார். இதன்மூலம் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் அரசு கட்சிக்குள் பெரியளவில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், திருகோணமலை மாவட்ட தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர்கள் பெரும்பாண்மையாக தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொண்டிருக்கின்றனர். திருகோணமலையின் முடிவு, வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் ஒரு வரலாற்று முடிவாகும். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய மாவட்டங்களிலுள்ள தமிழ் அரசு கட்சியினரும் தீர்மானங்களை எடுப்பார்களாயின் கட்சியின் தலைமை ஒரு தீர்க்கமான முடிவை நோக்கி நிர்ப்பந்திக்கப்படலாம்.

இலங்கை தமிழ் அரசு கட்சியால் ஓர் உறுதியான முடிவை எடுக்க முடியுமா என்னும் கேள்வியிருந்தாலும் கூட, கட்சியின் மாவட்ட மட்ட உறுப்பினர்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் ஏற்பட்டுவரும் மனமாற்றத்தை கட்சியின் தலைமையால் உதாசீனம் செய்ய முடியுமா? ஒரு சில தனிநபர்களின் விருப்பத்திற்குள் சிக்குப்பட்டிருக்கும் தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுவினர் இனியும் முன்னரைப் போல் சிந்திக்க முடியாதவர்களாகவும் அல்லது யாரோ ஒரு சிலரின் சிந்தனை வறட்சியின் அடிவருடிகளாக இருக்க முடியுமா என்னும் கேள்வியை அவ்வளவு எளிதாக புறம்தள்ள முடியுமா?

தமிழ் அரசு கட்சியின் தலைமை தீர்க்கமான முடிவொன்றை எடுக்கத் தவறினால், அதன் எழுபந்தைந்து வருடகால அரசியல் வரலாறும் முடிவுக்கு வரக் கூடும்.



## நல்லூரான் திருவடி - 24

# நான் கண்ட யோகர் சுவாமி

பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ஒரு தமிழ் கலாசார விழாவுக்காக யாழ்ப்பாணம் சென்றபோது யோகர் சுவாமிகளைக் கண்டேன். அப்போது அவர் நோய் வாய்ப்பட்டு, படுக்கையில் படுத்திருந்தார். சுவாமிகளின் சீடர்களான நவரத்தினமும் அவரின் துணைவியார் ரத்னா நவரத்தினமும் என்னை வரவேற்று, அவர்கள் இல்லத்தில் தங்க வைத்தனர். நான் யாழ்ப்பாணம் சென்ற தினத்தன்று மாலையே யோகர் சுவாமிகளைத் தரிசிக்கச்சென்றேன். அவர் தியான நிலையிலிருந்தார். சுவாமியிடம் அவரின் சீடர்கள் என்னை அறிமுகம் செய்தனர். மறுநாள், நான் கலந்துகொள்ள வந்திருந்த விழாவில் உரையாற்றினேன்.

இதனைத் தொடர்ந்து தாயகம் செல்வதற்காக விமான நிலையம் செல்லும் வழியில் அவரைப் பார்க்கப் போனோம். அப்போதும் யோகர் தியானத்திலிருந்தார். அவரின் பக்தர்கள் விளக்கை ஏற்றியும் கற்பூரம் ஏந்தியும் தேவாரம், திருவாசகம் போன்றவற்றைப் பாடியும் அவரை துதித்துச் சென்றனர். நாமும் அவரை வழிபட்டு, அவரின் குடில் ஆச்சிரமத்திலிருந்து விடைபெற்றோம்.

யோகரது தரிசனத்தைக் காணச் சென்றபோது ஒரு செய்தியை அறிந்தோம். ஞாயிறுதோறும் அவரது அடியவர்கள் ஊர், ஊராக தேவாரங்களைப் பாடிக்கொண்டு செல்லுகின்ற ஏற்பாட்டை யோகர் செய்திருந்தாராம். ஒவ்வொரு வாரமும் இந்தத் தெருவீதி தேவார உலாவுக்கு பக்தர் கூட்டம் அதிகரித்துக்கொண்டே வந்ததாம். இப்பக்தர்கள் கூட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள் சிறுவர்கள், பெரியோர்கள் என்று பலரும் இணைந்திருந்தனர். சைவ சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராக உபநிடத உண்மைகளோடு ஒன்றுசேரவைத்து, சைவத்தை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்று சுவாமிகள் விரும்பியிருந்தார். சைவ சிந்தாந்த பாடத்தை முறையாகக் கற்பிக்கவும் யோகர் ஒழுங்குகளைச் செய்தாராம்.

சுவாமிகளின் எதிர்பார்ப்புகளுக்கு வலுவூட்டுவதுபோல, சோல்பரி பிரபுவின் புதல்வன் ராம்ஸ் போதம், வித்துவான் க. கி. நடராஜன், திருமதி ரத்னா நவரத்தினம், நவரத்தினம், சச்சிதானந்தம் ஆகியோர் செயல்பட்டனர். ராம்ஸ் போதம் யோகரது பக்தர்களால் சாந்த சுவாமி என்று அழைக்கப்பட்டார்.

சுவாமிகளின் சிவதொண்டன் பணிகளை மனதில் நிறுத்தியவர்களாக திரு, திருமதி. ரத்னா நவரத்தினம் ஆகியோர் லண்டனில் சுவாமிகளின் பணிகளை மேற்பார்வையிட்ட பின்னர், தமிழகம் திரும்பியபோது அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அவர்களை வரவேற்று உபசரித்தேன். யோகரின் வாழ்க்கை, ஆன்மீக நெறியின் உயர் நிலையை நன்குணர்த்துவதாக அமைந்திருந்தது. சிவதொண்டன் என்றும் சிவதொண்டனே.


யோகரின் பேச்சு, அவரின் ஞானப் புன்சிரிப்பு என்பவை எப்போதும் என் மனதில் நிழலாடியவையாகவே இருக்கின்றன. ஒருதடவை யோகரின் புகைப்படமொன்று அவரின் அடியவர் ஒருவர் மூலமாக எனக்குக் கிடைத்தது. வேறு இரு நண்பர்கள் யோகர் பாடிய பாடல்கள் நிறைந்த நற்சிந்தனை என்ற நூலை எனக்குத் தந்தனர். இவற்றை வைத்திருக்கும்போது யோகரே என்னோடு உடனிருப்பதுபோன்ற உணர்வு ஏற்படும்.

யோகரின் முகத்தில் குழைந்த புன்சிரிப்பு, நெற்றியில் வெண்மையான திருநீற்றுப் பூச்சு, இடுப்பில் அழகுறக்கட்டப்பட்ட வெள்ளை வேட்டி, மார்புவரை வந்து புரளும் நரைத்த தாடி, தலையெல்லாம் நரைத்த வெண் சிகை, அமைதியையும் உயர்ந்த எண்ணங்களையும் தம்மிடம் வருவோரிடம் நிலைபெறச்செய்யும் தெய்வீக ஆற்றல் என்பவற்றின் உறைவிடமாக இருந்த யோகர் சுவாமிகளிடமிருந்து பிரிந்து செல்ல மனமில்லாது பிரிந்து வந்தேன்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவும் கரங்களாகும் உண்மையான நண்பர்கள்!

என். பத்ரி



நம் ஆடை அவிழும்போது யாரும் அழைக்காமலேயே நமது கைகள் உதவிக்கு வந்து நம் மானத்தைக் காப்பாற்றுகின்றன. அப்படித்தான் ஒரு நல்ல நட்பும். நம்மால் நல்ல நட்புகளைத் தக்க வைத்துக் கொள்ளவும், தீய நட்புகளை விலக்கி வைக்கவும் முடியும். உறவுகள் சுருங்கி வரும் இந்நாள்களில் நட்பின் பெருமையை காலம் நமக்கு கொடுத்த மிகப்பெரிய கொடையாகக் கருதி வளர்க்க வேண்டும்.

நட்புக்கு வயது இடைவெளி, பாலினம், மதம், கலாசாரம், தூரம், மொழி இவையெல்லாம் கிடையாது. நட்பு என்பது இரு தரப்பினருக்கும் ஆதரவு, மகிழ்ச்சி, பாசம், துன்பகாலத்தில் உதவுதல் போன்ற சிறப்புகளைக் கொண்டது. குழந்தைப் பருவத்தில் நட்புகள் ஏறத்தாழ அதே வயதுடையவர்களுடன் மட்டுமே அமைகின்றன. இவை பெரும்பாலும் அதே பள்ளியிலும் பகுதியிலும் வாழும் குழந்தைகளுடன் ஏற்படுபவை. ஒரே மாதிரியான விருப்பங்கள், திறமைகள், வயது ஆகியவற்றின் தாக்கம் இந்நட்பில் அதிகம் காணப்படும். காரணமின்றி ஒட்டிக்கொள்வதும், வெட்டிக்கொள்வதும் குழந்தைக் கால நட்பில் அடிக்கடி நிகழும்.

குழந்தைகளின் நட்புகளில் நிரந்தரத் தன்மை காணப்படுவதில்லை. ஆனால், பழக்கத்தில் இருக்கும் நண்பர்களோடு மிகவும் பாசத்துடன் நடந்துகொள்வார்கள். தம் உணவுகளைப் பகிர்ந்து கொள்வதும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் நண்பனுடன் விளையாடுவதும் இவர்களின் விருப்பமான செயல்பாடுகள் ஆகும். வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நட்பாகவும் இவை பின்னாள்களில் அமைய வாய்ப்புகள் உண்டு. குழந்தைகள் முதன் முதலாக குடும்பங்களுக்கு வெளியே உள்ள மற்றவர்களுடன் தொடர்புகொள்ள இந்த நட்புகள் உதவுகின்றன.

வாலிப வயது நட்புகள் சிக்கலானவை. பள்ளியில் மேல்வகுப்பிலும், கல்லூரியில் பட்டப் படிப்பிலும் பொதுவாக இவர்கள் படிப்பார்கள். பெற்றோர்கள்கூட அவர்களுடன் நட்புணர்வுடன்தான் பழக வேண்டியிருக்கும். "எல்லாம் தனக்கு தெரியும்" என்னும் எண்ணத்தில் அவர்களுடைய நடை உடை பாவனைகள் இருக்கும். அவர்களையும், அவர்களுடைய கொள்கைகளையும் மதிப்பவர்களையும் மட்டுமே இவர்கள் தனது நட்பு வட்டாரத்தில் சேர்த்துக் கொள்வர்.

இவர்களது நட்புகள் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகளைப் பார்ப்பது இல்லை. எதிர்பாலின கவர்ச்சிகள் சிலரை தடுமாறச் செய்யலாம். அதனால் படிப்பிலோ, செய்யும் தொழிலிலோ கவனம் குறையலாம். கவனம் தேவை. ஆனால், எடுத்துக் கொண்ட இலட்சியத்தை நிறைவேற்ற இறுதி வரை பாடுபடுவார்கள். நட்புக்காக உயிரையும் கொடுக்கத் துணிவார்கள்.

பணியிட நட்பு கள் பெரும்பாலும் நிரந்தரமானவை அல்ல. பணிசெய்யும் இடத்துக்கு ஏற்ப தனது நட்புகளை மாற் றிக் கொள்வது அவர்களுக்கு அவசியமாக இருக்கும். பணியிடத்தில் அனைவருடனும் விருப்பு வெறுப்பு எதுவுமின்றி நடுநிலையுடன் நட்பு பாராட்டுதல் நல் லது. அலுவலக நட்பில் விரிசல் ஏற்பட்டால், நட்புக் காலத்தில் பகிரப்பட்ட தனிப்பட்ட தகவல்கள் வெளிச்சத்துக்கு வர வாய்ப்புகள் உள்ளன. எனவே, இவர்கள் தங்கள் நட்புகளுடன் கவனமாக இருக்க வேண்டும். உணவு இடைவேளை, பணி நேரம் முடிந்தபின் சற்று நேரம் செலவிடுவது, குழு விளையாட்டு களில் ஈடுபடுவது ஆகியவற்றின் மூலம் பொதுவாக இவ்வகைத் தொடர்புகள் உறுதிப்படுகின்றன.

முதுமை காலத்தில் நண்பர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள். அவர்களின் உதவி பிறருக்கு மிகவும் குறைவாகவே தேவைப்படும். அதனால் இவர்களை நேரில் சந்தித்துப் பேசும் நட்புகளும் மிகவும் குறைவாகவே இருக்கும். அப்படி சந்திப்பவர்களும் ஓய்வூதிய சந்தா வாங்க வருபவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு வரக்கூடிய தொலைபேசி அழைப்புகள்கூட மிகக் குறைவாகவே இருக்கும். ஆனால், காலம் செல்ல செல்ல முதியோர்களுக்கு தனிமை வந்து ஒட்டிக் கொள்ளும். நட்பு வட்டாரமும் மிகவும் சுருங்கிவிடும்.

முகநூல் நண்பர்களில் உண்மையானவர்களை அடையாளம் கண்டு பழகுவது நல்லது. எந்தச் சூழ்நிலையிலும் தன் அந்தரங்க தகவல்களையும், படங்களையும் சமூகவெளிகளில், குறிப்பாக பெண்கள் தவிர்ப்பது நல்லது. இவற்றின் மூலம் புதிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்.

வாழ்க்கையில் நாம் கொண்டுள்ள உள்ளார்ந்த நட்புகளுக்கு இதய பூர்வமான பாராட்டுகளை அவ்வப் போது புன்முறுவல்களுடன் தெரிவிக்க வேண்டும். நண்பர்களுடன் உள்ள பிணைப்பை அவ்வப்போது புதுப் பித்துக் கொள்ள தேவையான முனைப் புகளை முன்னெடுப்பதில் சுணக்கம் காட்டக் கூடாது. உண்மையான நட்புகளை கல்விக் கூடங்களிலும், பணியிடங்களிலும், பொது வெளி களிலும் இனம் கண்டு வாழ்வில் சேர்த் துக் கொள்வதில் ஆர்வத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். வறுமையிலும், செழுமையிலும் நட்புகளுடன் இணைந்தே இருக்க வேண்டும்.

## இந்தவார ராசிபலன் 01.09.2024 - 07.09.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 16
நல்ல நேரம்: 9.05 - 10.35 ராகு காலம் : 4.35 - 06.05 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சொந்த பந்தங்களுக்கிடையே ஒற்றுமை மேலோங்கும். செய்தொழில், வியாபாரம் நன்றாக நடந்து இலாபம் பொங்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மன மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கும். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அரசு பணிபுரியும் பெண்கள் விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை காண்பீர்கள். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். இடமாற்றங்கள் ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். உத்தியோகத்தில் உயர்வுகள் ஏற்படும். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் சில நேரங்களில் ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். அனுசரித்துப்போவது நல்லது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம். சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தெய்வப் பிரார்த்தனையால் வேண்டியது நிறைவேறும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவும் உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கலாம். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடையும். அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைப்பதோடு தொழிலிலும் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவிகள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். வாகனங்களில் செல்லும் போது அவதானம் தேவை.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு வரும். புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


இந்த வாரம் பயணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் தேசிய இனப்பிரச்னையும்



வீரகத்தி தனபாலசிங்கம்







மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கடந்தவாரம் வெளியாகின.

முதலில் ஆகஸ்ட் 26 தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க "வளமான தேசம், அழகான வாழ்க்கை" என்ற தலைப்பில் தனது விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். அடுத்து ஆகஸ்ட் 29 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க "ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தலைப்பிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச "சகலருக்கும் வெற்றி" என்ற தலைப்பிலும் தங்களது விஞ்ஞாபனங்களை வெளியிட்டனர்.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான தங்களது திட்டங்களுக்கு விஞ்ஞாபனங்களில் முன்னுரிமை கொடுத்திருக்கும் மூவரும் நாடும் மக்களும் எதிர்நோக்குகின்ற பெரும்பாலும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்பதற்கான யோசனைகளையும் முன்வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நீண்ட விஞ்ஞாபனங்களை சாதாரண மக்கள் அமைதியாக இருந்து முழுமையாக வாசிப்பதில் அக்கறை காட்டுவார்கள் என்பது சந்தேகமே.

தனது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடந்த இரு வருடங்களாக முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தொடருவதை தவிர பொருளாதார மீட்சிக்கு வேறு வழியே கிடையாது என்பதே ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதியான நிலைப்பாடு. அந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மற்றைய இரு பிரதான வேட்பாளர்களினாலும் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கமுடியாது என்ற அர்த்தத்தில் பேசிவரும் அவர் தனக்கு ஐந்து வருடகாலத்துக்கு ஆணை தருமாறு நாட்டு மக்களைக் கேட்கிறார்.

பிரேமதாசவும் அநுரா குமாரவும் கூட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை சில திருத்தங்களுடன் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக கூறுகின்ற அதேவேளை, மக்களைப் பெரிதும் வதைக்கின்ற வரிகளைக் குறைப்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதனால் எவர் புதிய ஜனாதிபதியாக வந்தாலும், பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தவரை அவரின் செயற்பாடுகள் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை பின்பற்றியதாகவே அமையப்போகிறது என்பது தெளிவானது.

புதிய அரசியலமைப்பு மற்றும் தேசிய இனநெருக்கடியுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து மூன்று தலைவர்களும் விஞ்ஞாபனங்களில் கூறியிருப்பதை சுருக்கமாக நோக்குவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு வெகு முன்னதாகவே மூன்று வேட்பாளர்களும் இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தங்கள் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். விஞ்ஞாபனங்களிலும் அவர்கள் அதே நிலைப்பாடுகளையே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

புதிய அரசியலமைப்பு ஒன்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவரும் என்று அநுரா குமார நீண்டநாட்களாக கூறிவந்திருக்கின்ற போதிலும், அது தொடர்பில் அவர் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பது எவரும் எதிர்பார்க்காததாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான அரசாங்க காலத்தில் (2015-2019) முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை துரிதமாக நிறைவு செய்து புதிய அரசியலமைப்பின் மூலமாக அனைத்து மக்களும் ஆட்சியில் பங்கேற்கக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம், மாவட்டம் மற்றும் மாகாணத்துக்கு அரசியல் ரீதியானதும் நிருவாக ரீதியானதுமான அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப்போவதாக தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் கூறுகிறது. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் குறித்து நேரடியாக அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அதேவேளை ஜனாதிபதி விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் தங்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

மாகாண சபைகளிடம் இருந்து மத்திய அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்ட அதிகாரங்கள் மீண்டும் மாகாணசபைகளுக்கு கொடுக்கப்படும் என்றும் மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தீர்மானிக்கும் பொறுப்பு புதிய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய நல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கும் ஜனாதிபதி, உண்மை கண்டறிதல் மற்றும் நல்லிணக்கச் சட்டம் நிறைவேற்றப்படுவதுடன் காணாமல் போனோர் தொடர்பான நவாஸ் ஆணைக் குழுவின் அறிக்கையும் நடைமுறைப் படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பிரேமதாச மதத்தலைவர்கள், பாராளுமன்ற அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்படும் என்றும் தற்போதைய அரசியல் முறைமையை பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதுடன் ஒரே நாட்டின் கீழ் 13 வது திருத்தத்தின் அடிப்படையில் கூடுதல்பட்ச அதிகாரப் பரவலாக்கம் உறுதிசெய்யப்படும் என்றும் கூறுகிறார்.

புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் வரை 13 வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும், மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படமாட்டாது. அதற்கு பதிலாக மாகாண மட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் பலப்படுத்தப்படும் என்றும் பிரேமதாச வாக்குறுதியளித்திருக்கிறார்.

மூன்று தலைவர்களும் புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாக கூறியிருக்கும் அதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தங்களது அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக்கட்டி பாராளுமன்ற ஆட்சி முறையை நிலைநாட்டுவதுடன் நிறைவேற்று அதிகாரமற்ற ஜனாதிபதி பதவியை உருவாக்கும் என்று அநுரா குமார கூறியிருக்கும் அதேவேளை, ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தெரிவாகும் புதிய பாராளுமன்றத்திடம் ஒரு வருட காலத்திற்குள் புதிய அரசியலமைப்பை வரையும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்று விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டுமா இல்லையா என்பதை புதிய பாராளுமன்றமே தீர்மானிக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார். இது ஒன்றும் அவர் புதிதாக கூறுகின்ற விடயம் அல்ல. பிரேமதாசவும் அநுரா குமாரவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பு குறித்து தீர்மானிக்கும் பொறுப்பு மக்களின் புதிய ஆணையுடன் தெரிவாகும் அடுத்த பாராளுமன்றத்திடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்று பல மாதங்களுக்கு முன்னரேயே கூறிவந்திருக்கிறார்கள்.

முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசெத் டெப் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்மொழிவுகளின் அடிப்படையில் புதிய தேர்தல் நடைமுறையை புதிய பாராளுமன்றம் அறிமுகப்படுத்தும், மாகாணசபை பிரதிநிதிகளையும் சிவில் சமூக உறுப்பினர்களையும் கொண்டதாக அமைக்கப்படும் இரண்டாவது அரசாங்க சபை, மாகாணசபைகள் அவற்றின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகின்றன என்பதை கண்காணிக்கும் என்று விக்கிரமசிங்கவின் விஞ்ஞாபனம் கூறுகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு மற்றும் புதிய அரசியலமைப்பு குறித்து சுமார் மூன்று தசாப்த காலமாக பேசப்பட்டு வருகின்ற போதிலும், இது வரையில் அது தொடர்பிலான எந்த முயற்சியும் ஒப்பேறவில்லை. மூன்று பிரதான வேட்பாளர்களும் என்னதான் விஞ்ஞாபனங்களில் வாக்குறுதியளித்தாலும், அது விடயத்தில் அவர்களின் அரசியல் நேர்மை குறித்து மக்களுக்கு நிச்சயமாக வலுவான சந்தேகம் இருக்கிஷ றது. அத்துடன் தற்போதைய அரசியல் நிலைவரங்களையும் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவின் மட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது புதிய அரசியலமைப்பை வரைவது போன்ற பொறுப்புமிகுந்த பணிகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளிடையே கருத்தொருமிப்பைக் காண்பது சாத்தியமாக இருக்குமா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தேசிய இனநெருக்கடியுடன் தொடர்புடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரை, மூன்று தலைவர்களும் பெரும்பாலும் ஒரேவிதமான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தப்படுத்தியிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு அம்சமாகும். ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னரேயே அவர்கள் தங்களது இந்த நிலைப்பாட்டை பகிரங்கமாகக் கூறினார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் மூன்று வாரங்களே இருக்கும் நிலையில் இந்த தடவை பிரதான அரசியல் கட்சிகளின் அல்லது கூட்டணிகளின் பிரசாரங்களில் பெரும்பாலும் இனவாதமற்ற ஒரு போக்கை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. 2019 ஜனாதிபதி தேர்தலின்போது காணப்பட்ட சூழ்நிலையில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒப்பீட்டளவில் பிரயோசனமான முறையில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஒன்று இன்றைய சூழ்நிலையில் இருக்கிறது. ஆனால், அதைப் பயன்படுத்துவதில் அக்கறை காட்டாமல் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையிலான நிரந்தரத் தீர்வைக் கோரிநிற்கும் பெரும்பாலான வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் அதற்கு முதற்படியாக 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தைக் கேட்பது மாத்திரமல்ல அவ்வாறு செய்வதற்கு கொழும்புக்கு நெருக்குதலைக் கொடுக்குமாறு புதுடில்லியையும் கேட்கின்றன.

அவ்வாறு கேட்பதுடன் மாத்திரம்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.வின் ஜெகத்ரட்சகனின் இலங்கை முதலீடு: ரூ.89 கோடி முடக்கம் - ரூ.908 கோடி அபராதம்!

அரக்கோணம் தொகுதியின் தி.மு.க எம்.பி ஜெகத்ரட்சகனுக்கு திங்கள் கிழமையன்று (ஆகஸ்ட் 26) அமலாக்கத் துறை 908 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

இலங்கை மற்றும் சிங்கப்பூர் முதலீடு தொடர்பாக, ஜெகத்ரட்சகன் மற்றும் அவரது குடும்பத்தினர் செய்த அனைத்து தவறுகளுக்கும் சேர்த்து இந்த அபராதம் விதிக்கப்படுவதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

தனது வீட்டில் 2020ஆம் ஆண்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி சுமார் 89 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை முடக்கிய நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் ஜெகத்ரட்சகன் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு தள்ளுபடி செய்யப் பட்ட நிலையில், அந்நிய செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அமலாக்கத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**அமலாக்கத்துறை சொல்வது என்ன?**

புதன்கிழமையன்று (ஆகஸ்ட் 28) அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின்கீழ் தொழிலதிபரும் எம்.பியுமான ஜெகத்ரட்சகன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தொடர்புடைய இடங்களில் 11.9.2020 அன்று சோதனை நடத்தப்பட்டதாகவும், ஃபெமா சட்டம் 37ஏ பிரிவின்படி, 89.19 கோடி (இந்திய ரூபா) மதிப்பிலான அசையும் மற்றும் அசையா சொத்துகள் முடக்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளது.



கடந்த 2017ஆம் ஆண்டு சிங்கப்பூரில் உள்ள ஷெல் நிறுவனம் (பெயரளவில் மட்டுமே பதிவு செய்யப்பட்ட, உண்மையில் இல்லாத நிறுவனம்) ஒன்றில் 42 கோடி ரூபாயும் இலங்கையில் 9 கோடி ரூபாயும் ஜெகத்ரட்சகன் தரப்பினரால் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை குற்றம் சுமத்தியது.

அமலாக்கத்துறையின் நடவடிக்கைக்கு எதிராக ஜெகத்ரட்சகன் தரப்பினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கில் அமலாக்கத்துறையும் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

இந்த வழக்கில் ஜெகத்ரட்சகன் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி விளக்கம் அளித்தனர். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, ஜெகத்ரட்சகனின் ரிட் மனுவை தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்.

இதை செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ள அமலாக்கத்துறை, ஜெகத்ரட்சகன் குடும்பத்தினர் செய்த அனைத்து விதிமீறல்களுக்கும் சேர்த்து ரூ.908 கோடி அபராதம் விதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

முன்னதாக, சிங்கப்பூரில் உள்ள தனியார் நிறுவனத்தின் பங்குகளை ஜெகத்ரட்சகன் வாங்கியதாகவும் இந்தப் பங்குகளைத் தனது மனைவி, மகன், மகள் பெயர்களில் மாற்றியதாகவும் அமலாக்கத்துறை தெரிவித்திருந்தது.

இந்தப் பரிவர்த்தனைகள் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறாமல் நடந்ததாக அமலாக்கத்துறை குற்றம் சுமத்தியது. மேலும், இதுகுறித்து ஜெகத்ரட்சனிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதன் பின்னர், அவருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை நடத்தப்பட்டு சொத்துகள் முடக்கப்பட்டன.

**யார் இந்த ஜெகத்ரட்சகன்?**

ஜெகத்ரட்சகன் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கலிங்கமலை என்னும் ஊரில் 1950ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிறந்தார். வழுதாவூரில் பள்ளிக் கல்வியை முடித்த ஜெகத்ரட்சகன், ரயில்வே துறையில் ஊழியராகப் பணிக்குச் சேர்ந்தார். ஆனால், விரைவிலேயே அரசியல்தான் தனக்குச் சரியாக இருக்கும் எனக் கருதிய ஜெகத்ரட்சகன் எம்.ஜி.ஆர். துவங்கியிருந்த அ.தி.மு.கவில் இணைந்தார்.

கடந்த 1980ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலிலேயே அவருக்குப் போட்டியிடும் வாய்ப்பை அளித்தார் எம்.ஜி.ஆர். வெறும் 30 வயதில் உத்திர மேரூர் தொகுதியில் போட்டியிட்ட அவர், வெற்றி பெற்றார். இதற்கடுத்து 1984ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது, அவருக்கு செங்கல்பட்டு தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதிலும் அவர் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.கவுக்குள் அவருக்குப் பக்க பலமாக அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் இருந்தார். எம்.ஜி.ஆர். இறந்தவுடன் அ.தி.மு.க. இரண்டாகப் பிளவுபட்ட போது, ஜானகி அணியின் பக்கம் சென்றார் ஜெகத்ரட்சகன். 1989ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் உத்திரமேரூர் தொகுதியில் போட்டியிட்ட அவர், படு தோல்வியடைந்தார்.

இதன்பிறகு, அரசியலில் இருந்து சற்று ஒதுங்கியிருந்த அவர், அ.தி.மு. கவில் இருந்து ஆர்.எம்.வீரப்பனும் நீக்கப்பட்டு, எம்.ஜி.ஆர். கழகத்தைத் துவங்கியபோது அதன் பொதுச் செயலாளர் ஆனார்.

அந்தக் கட்சி, 1999ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி வைத்தது. அந்தக் கூட்டணியின் சார்பில் தி.மு.க. சின்னத்தில் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் ஜெகத்ரட்சகன் களமிறங்கினார். அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றார். பின்னர், 2004ஆம் ஆண்டு "வீர வன்னியர் பேரவை என்ற அமைப்பைத் துவங்கினார்.

கடந்த 2004ஆம் ஆண்டில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை ஜெகத்ரட்சகன் ஆதரித்தார். ஆனால், போட்டியிட வாய்ப்பு கிடைக்கவில்லை. 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவரது "வீர வன்னியர் பேரவை", "ஜனநாயக முன்னேற்றக் கழகம்" என்ற கட்சியாக உருமாறியது.

கடந்த 2009இல் இந்தக் கட்சி தி.மு.கவுடன் இணைந்தது. மீண்டும் அரக்கோணம் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பா.ம.கவின் வேட்பாளரான ஆர்.வேலுவை தோற்கடித்தார் ஜெகத்ரட்சகன்.

இதையடுத்து, மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறையின் இணையமைச்சரான ஜெகத்ரட்சகன், 2012இல் புதுப் பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் இணை அமைச்சராக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியை ஏற்பதற்கு முன்பாகவே, வர்த்தகம் மற்றும் தொழில்துறையின் இணை அமைச்சர் பதவியும் அவருக்கு வழங்கப் பட்டது.

கடந்த 2014இல் சிறிபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட்டுத் தோற்ற அவர், 2019 மற்றும் 2024இல் அரக்கோ ணம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் பல தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட போது, இவரும் ஒரு அனுமதியைப் பெற்றார். 1984இல் பாரத் பொறியியல் கல்லூரியைத் துவங்கிய அவர், வெகு சீக்கிரமே அதை வளர்த்தெடுத்தார். 2002ஆம் ஆண்டில் அந்தக் கல்லூரி நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக உயர்த்தப்பட்டது.

இதற்குப் பிறகு 2004ஆம் ஆண்டில் சிறிபாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, சிறிபாலாஜி செவிலியர் கல்லூரி, 2007ஆம் ஆண்டில் புதுச்சேரியில் சிறிஇலட்சுமி நாராயணா மருத்துவ அறிவியல் கழகம், 2002இல் சிறி பாலாஜி பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, 2007இல் சிறி பாலாஜி இயன்முறை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றைத் துவங்கினார்.

இதுதவிர, வேறு நான்கு பொறியியல் கல்லூரிகளும் ஒரு மருத்துவக் கல்லூரியும் அவராலோ அவருக்கு நெருக்கமானவர்களாலோ நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 1999இல் நாடாளுமன்ற உறுப்பினரான பிறகு, ஒரு மதுபான ஆலையையும் ஜெகத்ரட்சகன் துவங்கினார். இதற்குப் பிறகு நட்சத்திர ஹோட்டல்கள், மருந்து நிறுவனங்கள் என அவரது சாம்ராஜ்ஜியம் விரிந்தது.

**ஜெகத்ரட்சகனை தொடரும் சர்ச்சைகள்**

கடந்த 1999ஆம் ஆண்டில் இவர் நாடாளுமன்ற உறுப்பினரான பிறகுதான், மதுபான ஆலைக்கு உரிமத்தைப் பெற்றார் என்பதால், அது ஒரு விவாதமானது.

இவரால் 2009ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மருத்துவக் கல்லூரி ஒன்றில், எம்பிபிஎஸ் இடத்திற்கு உச்சநீதிமன்றம் நிர்ணயித்த கட்டணத்தைத் தாண்டிக் கூடுதல் கட்டணம் வசூலித்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்று, ரகசிய நடவடிக்கை மேற்கொண்டு செய்தி வெளியிட்டது.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேடு விவகாரத்திலும் 2012ஆம் ஆண்டில் இவரது பெயர் அடிபட்டது. இவருக்கு நெருக்கமானவர்களுக்குச் சொந்தமான ஜே.ஆர்.பவர் ஜெனரேஷன் பி. லிட் என்ற நிறுவனத்திற்கு 2007இல் ஒரு நிலக்கரிச் சுரங்கம் ஒதுக்கப்பட்டது.

சிறிது நாட்களுக்குப் பிறகு ஜே.ஆர் பவர் நிறுவன பங்குகள் கே.எஸ்.கே எனர்ஜி வெஞ்சர்ஸ் என்ற நிறுவனத்திற்குக் கைமாற்றப்பட்டன. சுரங்கமும் அந்த நிறுவனத்திற்குச் சென்றது. 2012இல் இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்தபோது பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டில் இலங்கையின் ஹம்பாந்தோட்டையில் 3.85 பில்லியன் டாலர்கள் தனியார் முதலீட்டில் கச்சா எண்ணை சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படும் என இலங்கை அரசு அறிவித்தது. சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட சில்வர்பார்க் இன்டர்நேஷனல் என்ற நிறுவனம்தான் அந்தத் திட்டத்தில் முதலீடு செய்யும் என்ற தகவல்கள் விரைவில் வெளியாயின.

இந்த நிறுவனத்தில், ஜெகத்ரட்சகனின் உறவினர்களே இயக்குநர்களாக இருந்த நிலையில், இவ்வளவு பணம் அவருக்குக் கிடைத்தது எப்படி என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்பிறகு அமலாக்கத் துறையின் பார்வை அவர் மீது பட்டது. 2020ஆம் ஆண்டு சட்டவிரோத பணப் பரிமாற்றம் தொடர்பாக அவரது வீடு, அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. ஃபெமா சட்டத்தின் கீழ் அவர் தொடர்புடைய ரூ.89.19 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கியது. இந்த வழக்கில் தற்போது 908 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# ஜெய் ஷா 35 வயதில் உலக கிரிக்கெட்டின் சக்திவாய்ந்த நபராக வளர்ந்தது எப்படி?



**சர்வதேச கிரிக்கட் சங்க தலைவரான ஜெய் ஷா**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், அதாவது ஐசிசி-யின் புதிய தலைவராக ஜெய் ஷா பதவியேற்க உள்ளார். 35 வயதிலேயே இந்தப் பதவியை எட்டிய இளம் கிரிக்கெட் நிர்வாகி இவர்தான்.

இதில் மற்றுமோர் சுவாரஸ்யமான விஷயம் உண்டு. 57 வயதுக்கு உட்பட்ட ஒருவர் ஐசிசி-யின் தலைமைப் பதவிக்கு வருவது இதுவே முதல்முறை.

ஐசிசி-யின் முதல் தலைவர் கொலின் கோட்ரே 1989இல் பதவிக்கு வந்தபோது அவரது வயது 57. அவருக்குப் பிறகு 11 பேர் ஐசிசி தலைவர் பொறுப்புக்கு வந்துள்ளார்கள்.

என்.சீனிவாசன் 2014இல் ஐசிசி தலைவராகத் தேர்வு செய்யப்பட்டதில் இருந்து, அதுவரை பிரெசிடென்ட் என்று அழைக்கப்பட்ட இந்தப் பதவி, சேர்மன் என்று அழைக்கப்பட்டது. அதற்குப் பிறகு மூன்று பேர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டனர். தற்போது நான்காவது ஐசிசி சேர்மனாக ஜெய் ஷா நியமிக்கப்பட்டுள்ளார்.


ஐசிசி தலைவர் என்ற நிலையை அடையும் ஐந்தாவது இந்தியர் ஜெய் ஷா. இவருக்கு முன், ஜக்மோகன் டால்மியா, சரத் பவார், என்.சீனிவாசன், ஷாங்க் மனோகர் ஆகியோர் ஐசிசி சேர்மனாக இருந்துள்ளனர்.

ஜெய் ஷா இந்த ஆண்டு டிசம்பர் 1 முதல் தனது புதிய பொறுப்பில் பதவியேற்கிறார். ஐசிசி தலைவராக ஜெய் ஷா அறிவிக் கப்பட்டதை அடுத்து சமூக ஊடகங்க ளில் பல மீம்ஸ்கள் வெளியாகி வருகின் றன.

அவற்றில், கிரிக்கெட் நிர்வாகத்தில் அவர் இந்த உயரத்தை எட்டுவதில், அவரது தந்தையும் உள்துறை அமைச்சருமான அமித் ஷாவுக்கு பங்கு இருப்பதாக இணைத்துப் பேசப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனிலவின்போது நல்லாட்சி தராததை தேர்தல் விஞ்ஞாபனம் தரப்போகிறதா?



பனங்காட்டான்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் மூன்று வாரங்கள் உள்ளன. ஊடக மொழியில் குறிப்பிடுவதானால் சூடு பிடித்திருக்கும் பரப்புரை வரப்போகும் வாரங்களில் சூறாவளியாக மாறும்.

தேர்தலில் போட்டியிடும் 38 வேட்பாளர்களில் சுமார் 20வரையானவர்களை காணவில்லையாம். பலரது வேட்பு மனுக்களில் தெரிவிக்கப்பட்டிருந்த தொலைபேசி இலக்கங்கள் பாவனையில் இல்லாதுள்ளனவாம். இதுவரை வெளி யான தகவல்களின் அடிப்படையில் மூன்று முதல் ஐந்து வரையானவர்கள் பினாமிகளாக போட்டியிடுகின்றனராம். இவர்களுக்குக் கிடைக்கும்(?) விருப்பு வாக்குகளை யாரோ ஒரு வேட்பாளருக்கு சேர்ப்பதற்கான முயற்சி இதுவென்று சொல்லப்படுகிறது.

ரணில், சஜித், அநுர, நாமல் ஆகிய நான்கு வேட்பாளர்கள் தினமும் ஏதோ ஒரு கூட்டத்தை நடத்தி வருகின்றனர். ஆரம்பக் கணிப்புகளின்படி சஜித்துக்கும் அநுரவுக்குமிடையே கடும்போட்டி என்றும், ரணில் இப்போது மூன்றாவது இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கணிப்பீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பது பற்றி அண்மைய இந்திய தேர்தலின் போது விரிவான ஒரு கட்டுரை வெளியானது. அதன் சாராம்சம் வருமாறு:

"முக்கியமான அபேட்சகர்களின் ஆதரவான அமைப்புகள் நடத்தும் கருத்துக் கணிப்புகள் அந்த அபேட்சகருக்கு ஆதரவாக கணிப்பினை வெளியிடும். யாருக்கு வாக்களிப்பது என்று முடிவெடுக்காது இருக்கும் வாக்காளர்களை தம்பக்கம் இழுப்பதற்கென்று இந்த முயற்சி. இதற்கு எதிர்மாறாக தமக்கு சார்பான வேட்பாளர் முன்னணியில் நிற்பதாகக் கூறாது, தோற்கடிக்க விரும்பும் வேட்பாளரை வெற்றியை நோக்கிச் செல்வதாக அறிவிக்கும் எதிர்தரப்பினரின் கருத்துக்கணிப்பு. இதனூடாக புதிய வாக்குகள் அவருக்குச் செல்வதை தடை செய்யும் முயற்சி இது" - இவ்வாறு அந்தக் கட்டுரை தெரிவித்திருந்தது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக வெளிவரும் கருத்துக் கணிப்புகள் மேற்சொன்ன இரண்டு வகைகளுக்குள்ளும் ஏற்றவையாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. நான் உங்கள் மூத்த மகன் வருகிறேன் என்று கூறியவாறு சிங்கள வாக்காளர்களை நோக்கி நடைபோடும் நாமல் ராஜபக்ச போர் வெற்றியையும், படையினரைப் பாதுகாப்பதையும் முதன்மைப்படுத்தியவாறு தனது பரப்புரையை மேற்கொள்கிறார்.

அநுர குமார திசநாயக்கவும் கிட்டத்தட்ட அதே பாணிதான். இவர் தரப்பில் படைத்துறையின் முன்னாள் அதிகாரிகள் பலர் இணைந்துள்ளனர். வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்ற கொலைகளுக்கு நீதி வழங்கப்படும் என்று தெரிவித்துவிட்டு, போர்க்குற்றம் புரிந்தவர்களையும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களையும் தண்டிக்க முடியாதென்றும் அறிவித்துள்ளார். ஜெனிவாவின் தீர்மானம் எதனை நீதியாகக் கொள்கின்றதோ அதனை மறுக்கும் அபேட்சகராக அநுர குமார காட்சி தருகிறார்.

போரை வெற்றி கொண்ட நாயகன் தாமே என்று மார்தட்டும் முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெறும் கதிரைகளைப் பார்த்து உரையாற்றும் பரிதாப நிலைக்கு வந்துள்ளார். அதேசமயம், வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளிவர ஆரம்பித்துள்ளன.

பொருளாதார அபிவிருத்தியை மையப்படுத்தியாக அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தாம் ஜனாதிபதியாகத் தொடர ஆதரவு கேட்கிறார் ரணில். மகாநாயக்கர்களிடம் கையளித்த பின்னர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளார் சஜித் பிரேமதாச. நாமலின் விஞ்ஞாபனமும் விரைவில் வரவுள்ளதாம். இதுவரை வெளியான - இனி வரவுள்ள எந்தவொரு சிங்களவரின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சமஷ்டி பற்றி எதுவுமே இருக்காது என்பது பகிரங்கமாகியுள்ளது.

எந்தவொரு தேர்தலின்போதும் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது கட்சிகளால் வெளியிடப்படும். இதனை ஆங்கி லத்தில் லெக்ஷன் மனிஃபெஸ்ரோ என்பர். ஓர் அரசியல் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் எவற்றைச் செய்ய கருதுவதாகத் தெரிவிக்கும் எழுத்து மூலமான அறிக்கை அல்லது கட்சியின் கொள்கை விளக்க அறிக்கை இதுவென்று ஒக்ஸ்ஃபோட் அகராதி தெரிவிக்கிறது. முக்கியமாக பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, சட்டம் மற்றும் ஒழுங்கு, சூழல் பாதுகாப்பு போன்றவைகளை எவ்வாறு நாட்டுக்கு நன்மையளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தலாம் என்பவைகளை தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவிப்பதாக இருக்க வேண்டும்.

ஆனால், இப்போது வெளிவரும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இவைகளை காணமுடியாது. பெரும்பான்மை இனத்தை குளிர்ச்சிப்படுத்தி அவர்களின் வாக்குகளை அபகரிப்பதையே இவை நோக்கமாகக் கொண்டுள்ளன. எனவே தமிழினம் தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக சிங்கள வேட்பாளர்களில் எவரையும் நியாயமானவர்களாக அடையாளம் காணமுடியாது.

இவ்வகையான சீத்துவக்கேடான அரசியல் போக்கில், பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பார்த்த பின்னரே தமிழரசுக் கட்சி முடிவெடுக்கும் என அதன் எம்.பி.க்களில் ஒருவரான சுமந்திரன் கூறி வருவதும், அவருடன் ஒத்தூதும் சகாவான சாணக்கியன் அதனை வழிமொழிவதும் தமிழ் மக்களை பெரும் இடருக்குள் தெரிந்து கொண்டே தள்ளிவிடும் முயற்சி.

இதனை நன்குணர்ந்து கொண்ட தமிழ் மக்கள் இப்போது தாமாகவே ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை காணமுடிகிறது. தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதென அடுத்தடுத்து தமிழரசுக் கட்சியின் இரண்டு மாவட்டக் கிளைகள் முடிவெடுத்துள்ளன. பொதுவேட்பாளர் அரியநேத்திரன் செல்லுமிடமெங்கும் தமிழ் மக்கள் தன்னெழுச்சி கொண்டு அவருக்கு வரவேற்பு வழங்கி வருவதை பாரிய மாற்றம் என்றே கூற வேண்டும்.

தமிழரசின் மூத்த தலைவர் என்று மதிக்கப்பட்ட இரா.சம்பந்தனின் திருகோணமலையின் தமிழரசு மாவட்டக் கிளை தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதென முடிவெடுத்து பகிரங்க

> "இலங்கை - இந்திய 13ஆம் திருத்தம் அப்போதைய காலத்துக்குத் தேவையானது. ஆனால், இப்போது அது பொருத்தமற்றது" என்று 2018ஆம் ஆண்டில் தமிழரசுத் தலைவராகவிருந்த இரா. சம்பந்தனிடம் நேரடியாக இந்தியா தெரிவித்ததை இப்போது நினைவுக்குட்படுத்தினால், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் தமிழர் வாக்குகளை காத்திரமாக பயன்படுத்த வேண்டும் என்று கூறியதன் உள்ளார்ந்த அர்த்தத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

மாக அறிக்கையும் வெளியிட்டுள்ளது. திருமலையின் புதிய எம்.பி. குகதாசனும் இந்த முடிவை ஏற்று அங்கீகரித்துள்ளார். அடுத்து கிளிநொச்சி தமிழரசு மாவட்டக் கிளையும் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அத்துடன் அரியநேத்திரனுக்கு கிளிநொச்சியின் பல இடங்களில் பெரு வரவேற்பையும் அளித்துள்ளது. கிளி நொச்சி எம்.பி.யான சிவஞானம் சிறீதரன் பொதுவேட்பாளரை ஆதரித்த நிலையில் அவரது தொகுதியின் மாவட்டக் கிளை அவரது நிலைப்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது எனவும் இதனைச் சொல்லலாம்.

இதுவரை காலமும் சிங்கள வேட்பாளர் களை தமிழர்கள் ஆதரித்து வாக்களித்தனர். ஆனால், தொடர்ந்து தமிழர்கள் ஏமாற்றப்பட்டதே வரலாறு. இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டுமா என்று கேள்வி எழுப்பியதன் மூலம் தமிழர் அனைவரும் பொதுவேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பி.யான தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் சிறீநேசன்.

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவான பரப்புரைகள் ஆர்பாட்டமின்றி வடக்கு கிழக்கின் பல பகுதிகளிலும் இடம்பெற்று வருகிறது. மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஒருபோதும் செயற்படமாட்டோமென்று அழுத்தமாகக் கூறியுள்ளார் அத்தொகுதியின் தமிழரசு எம்.பி.யான கலையரசன்.

கடந்த வாரம் இலங்கைக்கு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்ட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் தமிழ் அரசியல்வாதிகள் சிலரை சந்தித்தபோது தெரிவித்த கருத்து இப்போது பலவாறாக விமர்சிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை தேர்தலின்போது காத்திரமான வழியில் பயன்படுத்த வேண்டுமென அவர் கூறியதாக அவரைச் சந்தித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை - இந்திய 13ம் திருத்தம் அப்போதைய காலத்துக்குத் தேவையானது. ஆனால், இப்போது அது பொருத்தமற்றது என்று 2018ம் ஆண்டில் தமிழரசு தலைவராக இருந்த இரா. சம்பந்தனிடம் நேரடியாக இந்தியா தெரிவித்ததை இப்போது நினைவுக் குட்படுத்தினால் இந்திய தேசிய பாது காப்பு ஆலோசகர் அஜித் தோவால் தமிழர் வாக்குகளை காத்திரமாக பயன்படுத்த வேண்டும் என்று கூறியதன் உள்ளார்ந்த அர்த்தத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்று இந்திய தரப்பில் நேரடியாகக் கூற முடியாது. அவ்வாறு கூற வேண்டுமென எதிர்பார்க்கவும் முடியாது. 13ம் திருத்தம் இப்போது பொருத்தமற்றது என்று ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே தெரிவித்த இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் ராஜதந்திரப் பாசையில் சொல்ல வேண்டியதை சொல்லியுள்ளார் என்றே கருதப்படவேண்டும்.

நல்லாட்சி அரசுடன் தேனிலவைக் கழித்தபோது பெறமுடியாது போனதை தேர்தல்கால விஞ்ஞாபனம் என்று கூறப்படும் கொள்கை அறிக்கையில் கிடைக்குமென எதிர்பார்ப்பது தமிழ் மக்களை எத்திப் பிழைக்கும் அரசியல் போக்கு. தமிழரசின் இன்றைய பரிதாப நிலைக்கு அவர் ஒருவரே காரணம் என்று தமது தீர்ப்பை வழங்கியுள்ளார் திரு.சி.வி. விக்னேஸ்வரன். தமது மாணவன் பற்றி அவரது ஆசான் கூறியதை வீட்டுக் குள் இருக்கும் எவரும் எதிர்க்கும் நிலை இன்றில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சன் அருண் பிரசாத்

# வில்லியம் கோபல்லாவ முதல் ரணில் விக்ரமசிங்க வரை!

## இலங்கை ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட பரிணாம மாற்றங்கள்!!

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ம் தேதி நடக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

**சுதந்திர இலங்கையின் தேர்தல் வரலாறு**

பிரித்தானிய ஆட்சியின் கீழிருந்த இலங்கை, 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் தேதி சுதந்திரமடைந்தது.

எனினும், பிரித்தானியாவின் நாடாளுமன்ற கட்டமைப்பை பிரதிபலிக்கும் வகையில் அமைந்த ஒரு டொமினியன் அந்தஸ்துடைய அரசாங்கமாகவே 1972ம் ஆண்டு வரை இலங்கை செயற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில், 1972ம் ஆண்டு இலங்கை குடியரசாக்கப்பட்டதை அடுத்தே, இலங்கையில் முதலாவது ஜனாதிபதி தேர்வு செய்யப்பட்டார்.

இலங்கை குடியரசாக அறிவிக்கப்பட்ட நிலையில், இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக வில்லியம்



கோபல்லாவ நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் 1978ம் ஆண்டு புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. இந்த புதிய அரசியலமைப்பின் ஊடாக, ஜே.ஆர்.ஜெயவர்தன இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தேர்தல் 1982ம் ஆண்டு நடைபெற்றதுடன், அந்த தேர்தலின் ஊடாக ஜே.ஆர்.ஜெயவர்தன மீண்டும் ஜனாதிபதியாக தேர்வானார்.

1988ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவர் 1992ம் ஆண்டு நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து, இடைக்கால ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டார். 1994ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன், 1999ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, மீண்டும் ஜனாதிபதியாக தெரிவானார்.



2005 மற்றும் 2010ம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் மஹிந்த ராஜபக்ஸ தெரிவு செய்யப்பட்டு, இரண்டு முறை ஆட்சிபீடம் ஏறினார்.

அதனைத் தொடர்ந்து. 2015ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவும், 2019-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸவும் தெரிவானார்கள்.

இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியால் நாட்டு மக்களின் போராட்டத்திற்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகினார். அந்த



இடத்திற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

**தேர்தல்களில் ஏற்பட்ட மாற்றங்கள்**

1982ம் ஆண்டு நடைபெற்ற இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் அடங்கலாக ஐந்து வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், லங்கா சமசஜ கட்சி மற்றும் நவ சமசஜ கட்சி ஆகியன போட்டியிட்டன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் குமார் பொன்னம்பலம் அப்போது போட்டியிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, 1988ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் சிறிலங்கா மஹஜன பக்ஷய ஆகிய கட்சிகள் மாத்திரமே போட்டியிட்டன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளை தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட முதல் இரண்டு தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் வெற்றியை தன்வசப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து, 1993ம் ஆண்டு ரணசிங்க பிரேமதாஸ தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில், இடைக்கால



ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தனித் தலைமைத்துவத்தின் கீழ் நாடு நிர்வகிக்கப்பட்ட காலம் 1994ம் ஆண்டுடன் முடிவுக்கு வந்தது. இந்த நிலையிலேயே, ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு 1994ம் ஆண்டு வெளியிடப்படுகின்றது.

இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சி பீடத்தை கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்ச்சியடையச் செய்யும் நோக்கில், இரண்டாவது பெரிய கட்சியாக அப்போது திகழ்ந்த சிறிலங்கா சுதந்திர கட்சி முதல் முறையாக கூட்டணியாக தேர்தலை எதிர்நோக்கியது.

அதுவரை கை சின்னத்தில் போட்டியிட்ட சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பெயரில் நாற்காலி சின்னத்தில் 1994ம் ஆண்டு தேர்தலை எதிர்நோக்கியது.

1994ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 6 கட்சிகள் போட்டியிட்ட நிலையில், சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் கூட்டணி மாபெரும் வெற்றியை பெற்று, சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையை சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தன்வசப்படுத்தினார். இந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவை சந்தித்தது.

அதனைத் தொடர்ந்து, 1999ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 13 கட்சிகள் போட்டியிட்டன. இந்த தேர்தலிலும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றியை தன்வசப்படுத்தினார்.

அதன்பின்னர் 2005ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சிறீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி உருவாக்கப்பட்டு, வெற்றிலை சின்னத்தில் மஹிந்த ராஜபக்ஸ போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2005ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 13 கட்சிகள் போட்டியிட்டன.

2010ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் மஹிந்த ராஜபக்ஸ களம் இறங்கினார்.


சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஆட்சியை முறியடிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் பல கட்சிகளின் ஆதரவுடன் பொது வேட்பாளர் ஒருவர் அறிவிக்கப்பட்டார். இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போர் முடிவடைந்த பின்னணியிலேயே இந்த தேர்தல் நடைபெற்றது.

போரை முடிவுக்கு கொண்டு வர தலைமைத்துவம் வழங்கிய பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஸ சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் களம் கண்டார். போரை களத்திலிருந்து வழிநடத்திய ராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியின் பொது வேட்பாளராக களமிறங்கினார்.



சரத் பொன்சேகா பொது வேட்பாளராக பொது சின்னமான அன்னம் சின்னத்தில் போட்டியிட்டிருந்த போதிலும், அந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ வெற்றியை தன்வசப்படுத்தினார். போர் வெற்றியை மையப்படுத்தியே 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் நடத்தப்பட்டிருந்தன.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக ஜனாதிபதியாக பதவி வகித்த ஒருவர் மூன்றாவது முறையாகவும்



2015ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

2005, 2010 தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மஹிந்த ராஜபக்ஸ, அரசியலமைப்பில் திருத்தத்தை ஏற்படுத்தி 2015ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் வெற்றிலை சின்னத்தில் மஹிந்த ராஜபக்ஸ போட்டியிட்டார். அவரது சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளராக செயற்பட்ட மைத்திரிபால சிறிசேன கட்சியிலிருந்து வெளியேறி, அன்னம் சின்னத்தில் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டார். பொதுச் சின்னத்தில் களமிறக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி உள்பட பல கட்சிகளும் ஆதரவு வழங்கியிருந்தன.

இந்த தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டிய நிலையில், "இலங்கையில் நல்லாட்சி அரசாங்கம்" என்ற பெயரில் கூட்டணி ஆட்சியொன்று அமைக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் சுமந்திரன் மேலும் தனிமைப்படுத்தப்படுகிறாரா?

**கந்தையா அருந்தவபாலன்**



அரசியல் கட்சிகளில் பொதுவாகக் காணப்படும் கழுத்தறுப்புகள், பிச்சுப் பிடுங்கல்கள், தன்னிச்சையாக முடிவெடுத்தல், அதற்குத் தலையாட்டுதல் போன்ற இன்னோரன்ன எதிர்மறைக் குணாதியங்கள் யாவற்றையும் கொண்டதுதான் இலங்கைத் தமிழரசுக்கட்சி. எனினும் ஆயுதப் போராட்டம் வலுவடையும்வரை இலங்கைத் தமிழர்களின் தனிப்பெரும் அரசியல் இயக்கமாக அது இருந்து வந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துகள் இருக்கமுடியாது. 1976 இல் ஏனைய இரு கட்சிகளுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றம் பெற்றபோதும் மக்களிடையே அதன் செல்வாக்கு அதிகரித்தே வந்துள்ளது. 2004 இல் ஓர் அரசியல் உத்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் தத்தெடுக்க முற்பட்ட வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமான உதயசூரியனுக்குப் பதிலாக வீடு கையகப்படுத்தப்பட்டதுடன் தமிழரசுக்கட்சியைச் சேரந்த இரா. சம்பந்தன் அதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டதால் இலங்கைத் தமிழரசுக்கட்சி மீண்டும் தமிழர் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் நிலை உருவானது. ஆயுதப் போராட்டத்தின் முடிவுடன் குறிப்பாக 2010 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுடன் அக்கட்சி தனது செல்வாக்கை உறுதியாக நிலைநிறுத்தத் தொடங்கியது. நான்கு கட்சிகளின் கூட்டாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தாலும் அதில் தமிழரசுக் கட்சியே ஆதிக்கம் செலுத்தி வந்தது. சமகாலத்தில் அக்கட்சி சுமந்திரன் என்றவடிவில் தன் அழிவுக்கான விதையையும் ஊன்றிவிட்டது.

2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் கட்சியின் நீண்டகால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உருவான பின் கட்சியைப் பாதுகாத்து வந்தவருமான பேராசிரியர் சிற்றம்பலத்தின் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் சம்பந்தன் அவரைத் தூக்கியெறிந்துவிட்டு அந்த இடத்துக்குச் சுமந்திரனை நாடாளுமன்ற உறுப்பினராக நியமனஞ் செய்திருந்தார். அன்றிலிருந்து சுமந்திரன் தமிழரசுக்கட்சியில் தனது அதிகாரத்தை நிலைநாட்டத் தொடங்கினார். அப்போது தமிழரசுக் கட்சியின் தலைவராக மட்டுமன்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் சம்பந்தன் இருந்தமையும் சம்பந்தனின் நம்பிக்கைக்குரியவராக சுமந்திரன் செயற்பட்டமையும் கட்சியில் தனது அதிகாரத்தை தக்கவைக்க சுமந்திரனுக்கு வாய்ப்பாகிவிட்டது. பின்னர் மாவை சேனாதிராசா தமிழரசுக்கட்சியின் தலைவராக வந்திருந்தாலும் கட்சியின் கட்டுப்பாடு முழுவதும் சம்பந்தன் கையிலேயே இருந்தது. மாவையின் பலவீனமான ஆளுமையும் சம்பந்தனின் முதுமைப் போக்கும் கெட்டிக்கார சுமந்திரனில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குக் கட்சியைத் தள்ளியது. இதன் காரணமாக தேசிய, சர்வதேச அரசியல் ஊடாட்டங்களில் மட்டுமல்ல கட்சி விடயங்களிலும் சுமந்திரன் தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுக்க முடிந்தது. இதேவேளை கூட்டமைப்பின் தலைமை சம்பந்தனிடம் இருந்ததமையும் அதிலிருந்த ஏனைய கட்சிகள் தங்கள் நாடாளுமன்றக் கதிரைகளைத் தக்கவைப்பதற்காகக் கூட்டமைப்பில் தங்கிவாழும் நிலை காணப்பட்டமையும் சுமந்திரனுக்கு இன்னும் வாய்ப்பாக அமைந்திருந்தது. இந்நிலைமைகள் சுமந்திரன் தன்னிச்சையாக முடிவெடுக்கவும் அதனை மற்றவர்கள்மீது திணிப்பதற்கும் ஏதுவாக மாறியது. இது கூட்டமைப்பின் பங்காளிகளுக்கிடையில் மட்டுமன்றி தமிழரசுக் கட்சியிலும் அதிருப்தியையும் வெடிப்புகளையும் படிப்படியாக உருவாக்கத் தொடங்கியது. தனது தீர்மானங்களும் செயற்பாடுகளும் சரியானவை என்றும் அவற்றை எல்லோரும் எப்போதும் ஏற்கவேண்டுமென்றும் சுமந்திரன் கருதி வருவதால் அவற்றுக்குத் தடையாக இருப்போரைத் திட்டமிட்டு ஓரங்கட்டவும் ஒருபோதும் அவர் தயங்கியதில்லை. கொத்திக்கலைப்பதில் சுமந்திரன் கைதேர்ந்த கலைஞன். இதுவே கட்சியிலும் கூட்டமைப்பிலும் நிகழ்ந்தது. சுமந்திரனின் தவறான முன்னெடுப்புகளை எதிர்த்த கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள்,விசுவாசிகள் செயற்பாட்டாளர் பலர் கட்சியிலிருந்து படிப்படியாக வெளியேறியது போல கூட்டமைப்பின் பங்காளிகளிகளும் படிப்படியாக வெளியேறினர். இறுதியில் தமிழரசுக் கட்சியும் இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது. கூட்டமைப்பும் முகவரியற்றுப் போய்விட்டது. தமிழரின் பலம் பொருந்திய ஓர் அரசியல் இயக்கமாக சம்பந்தனிடம் கையளிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தந்தை செல்வாவினதும் அவரின் தொண்டர்களதும் உதிரத்தாலும் உழைப்பாலும் கட்டி வளர்க்கப்பட்ட தமிழரசுக்கட்சியையும் இந்த நிலைக்குக் கொண்டு வந்ததில் பெரும் பங்கு கெட்டிக்காரன் சுமந்திரனையே சாரும்.

கட்சியில் படிப்படியாக வளர்ந்து வந்த சுமந்திரனுக்கு எதிரான அதிருப்தி நிலை இறுதியில் தமிழரசுக்கட்சி தலைவர் தேர்தலில் வெளிப்பட்டது. இதுவரை மற்றவரை ஓரங்கட்டிவந்த சுமந்திரனை இப்போது கட்சியின் பெரும்பான்மை ஓரங்கட்டத்தொடங்கியதன் தொடக்கமாக கட்சித் தலைவருக்கான தேர்தல் முடிவு அமைந்துவிட்டது. கட்சி விசுவாசிகளைவிட தனது விசுவாசிகளையே சுமந்திரன் நம்புகிறார். அதனால் தனது விசுவாசிகளை கட்சிப் பிரமுகர்களாக மாற்றமுனைந்தார். மறுபுறத்தில் கட்சியில் அதிகாரம் பெற்ற ஒருவராக இருந்து வந்ததால் கட்சி விசுவாசிகள் பலரையும் தனது விசுவாசகளாக மாற்றிக்கொண்டார். இந்த இரண்டுமே கட்சியைவிட தனிமனிதனுக்கு முக்கியமளிக்கும் நிலையை ஏற்படுத்தி கட்சியைப் பலவீனமாக்கியது என்பதே உண்மை. உறுதியான வெற்றி என்ற முடிவுடன் தலைவர் தேர்தல் களத்தில் குதித்த சுமந்திரன் தோல்வியடைந்தவுடன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டிருக்கவேண்டும். தனது கடந்த காலத் தவறுகளை மீளாய்வு செய்து கட்சியில் தன்னைப்பலப்படுத்துவதற்கு முயன்றிருக்கவேண்டும். அதைவிடுத்து தனது சட்ட அறிவையும் மேதாவித்தனத்தையும் காட்டப் புறப்பட்டதால் கட்சியும் அதன் தொண்டர்களும் மட்டுமல்ல அவரும் இப்போது சந்தியில்தான். அவரது ஆதரவாக உரக்கக் குரல் கொடுத்த பலரை உறங்கு நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளார். தொடக்கத்திலிருந்தே கட்சி நலனைவிட தனது சொந்த நலனுக்கும் 'இகோ' வுக்கும் சுமந்திரன் முக்கியமளித்ததன் விளைவு இது.

கட்சியும் களநிலையும் மாறிவிட்டதை சுமந்திரன் உணராது வழமைபோலத் தனது முடிவைக் கட்சியின் முடிவாக்கும் நினைப்பில் பொதுவேட்பாளருக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார். சிவில் அமைப்புகளின் தமிழ்ப் பொதுவேட்பாளர் முன்மொழிவு உருவெடுக்க முன்னரே தனது கட்சியின் தீர்மானம் எதுவுமின்றி அதற்கெதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதுமன்றி தனது ஆதரவாளரைக் கூட்டி செல்வா கலையரங்கில் பொதுவேட்பாளரைத் தான் தோற்கடிப்பேன் என்று சபதமும் எடுத்துக்கொண்டார். இது சுமந்திரனை ஓரங்கட்டுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த பல்வேறு தரப்புகளுக்கும் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலானது. கட்சிக்குள், கட்சிக்கு வெளியில், நாட்டுக்கு வெளியில் உள்ள தரப்புகள் தமக்குள் இணையாவிட்டாலும் செயற்பாட்டில் ஒன்றிணைந்தனர். சட்டத்தைத் துணையாகக் கொண்டு சிறிதரனை ஓரங்கட்டலாம் என எண்ணிய சுமந்திரனை பொதுவேட்பாளரைக் கொண்டு சிறிதரன் ஓரங்கட்டி வருவது தெளிவாகப் புலப்படத் தொடங்கியுள்ளது. தொடக்கத்தில் பொதுவேட்பாளர் கருவை உருவமாக்க முடியமா எனச் சிவில் அமைப்புகள் ஏங்கிநிற்க அது முளையிலேயே கருகிவிடும் எனச் சுமந்திரன் மட்டுமன்றி பலதரப்புகளும் கணித்துநிற்க இவை எல்லாவற்றையும் கடந்து பொதுவேட்பாளர் என்ற கரு உருவாகி, நடந்து,

> சுமந்திரன் நாளாந்தம் தனிமைப்படுத்தப்பட்டு வருவதால் அவர் உட்பட பொதுவேட்பாளரை எதிர்க்கும் 'தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினர் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதை அவர்களின் முடிவுக்கே விட்டுவிடும் தீர்மானத்து வரும் வாய்ப்புகளே 'அதிகம் தென்படுகின்றன.

இப்போது ஓடத்தொடங்கிவிட்டது. அதனால் அதனை அணைப்போர் தொகையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. வரும் நாட்களில் பொதுவேட்பாளரை ஆதரித்தோருக்கு ஏறுமுகமும் எதிர்த்தோருக்கு இறங்கு முகமுமாகத்தான் இருக்கப்போவதை நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. இது சுமந்திரனுக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தக்கூடும்.

சுமந்திரன் போராட்டத்துக்கு முற்பட்டகாலத் தமிழ்த் தலைவர்கள் போல அல்லது தற்போதைய மலைநாட்டுத் தமிழ்த் தலைவர்கள், முஸ்லிம் தலைவர்கள் போல சிங்களத் தலைமைகளுடன் இணக்கப்பாட்டு அரசியல் செய்ய விரும்பும் ஒருவர். தமிழ்த் தேசியம், ஜனநாயவழிப் போராட்டம் எல்லாம் அவருக்கு வேப்பிலை. டக்ளஸ் போன்று அரசியல் செய்யவும் தயங்கமாட்டார். ஆனால் என்ன செய்வது தமிழ்த் தேசியம் பேசும் கட்சியினூடாக வந்துவிட்டது அவருக்குப் பெரியதடை. தானாகப் போகாது தமிழரசு கட்சியையும் அந்த நிலைக்கு இழுத்துச் செல்வதன்மூலம் அத்தடையை உடைக்க முனைந்தவர். அந்தவகையில்தான் பொதுவேட்பாளரையும் எதிர்க்கும் நிலையை எடுத்தார். அதேவேளை பொதுவேட்பாளருக்குப் பதிலாக யாருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட அவரால் இதுவரை முடியவில்லை. பொதுவேட்பாளரின் கோரிக்கையை ஈடுசெய்ய வேண்டுமென்ற நோக்கில் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டியை அல்லது சமஷ்டிக்குச் சமமான தீர்வை முன்வைக்கும் தென்னிலங்கை வேட்பாளருக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என்று தானும் சொன்னது மட்டுமன்றி முதலில் ரணிலிடமும் பின்னர் சஜித்திடமும் சென்று பார்த்தார். சமஷ்டியை வைத்து தற்கொலை செய்ய ரணில், சஜித் ஒன்றும் முட்டாள்களல்லர். பதிலாகச் சொற்சிலம்பமாடி வார்த்தைகளை விஞ்ஞாபனத்தில் இணைப்பதற்கும் சுமந்திரன் சொல் தமிழர்களிடத்து எவ்வளவுதூரம் இனிச் செல்லுபடியாகும் என்ற ஐயம் அவர்களை விடவில்லை. எனவே பிறகட்சி முகவர்களைத் தவிர்த்து தமது கட்சி முகவர்களின் மூலமே வடக்குக் கிழக்கில் அரசியல் செய்ய அவர்கள் தொடங்கிவிட்டனர். இது சுமந்திரனுக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது. எனினும் தனது நிலையில் சற்றும் மனந்தளராத வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது போல சஜித்தின் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி இருப்பது போல வியாக்கியானம் செய்து சஜித்துக்கு வாக்களிக்குமாறு சுமந்திரன் கோரக்கூடும். ஏனெனில் ஒன்றையாட்சிக்குள் சமஷ்டி என்றும் ஏக்கிய என்பது ஐக்கிய என்றும் வியாக்கியானம் பண்ணிய சாணக்கிய ராச்சே.

ஆனால் இதுவரை இவருக்கு ஆதரவு நிலைப்பாட்டில் இருந்தவர்கள் படிப்படியாக எந்த வேட்பாளருக்கும் ஆதரவு வழங்காது மக்களின் விரும்பத்துக்கே விட்டுவிடவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கிவிட்டனர். கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் இதனை மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் முன்வைத்ததுடன் அதனை ஊடகங்களுக்கும் தெரிவித்திருந்தார். இதேநிலைப்பாட்டை இப்போது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் எடுக்கத்தொடங்கிவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் யாரும் இந்தவிடயத்தில் சுமந்திரனின் பின்னால் செல்லத்தயாராக இல்லைப் போல் தெரிகிறது. இவர்களுள் சிலர் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இதேவேளை தமிழரசுக்கட்சியின் பதவிகளுக்கான தேர்தலில் செயலாளர் பதவிக்குச்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் இராஜதானியில் நல்லை கந்தன் தேரேறி வருகிறான்...!



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தனின் குரோதி வருடத்திற்குரிய தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்கும் உள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டது எனலாம். யாழ்ப்பாணத்தில் நல்ல ஊராக சைவ அனுஷ்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றமாக விளங்குவது நல்லையம்பதி எனலாம்.

**பெருந்திருவிழா சிறப்பு**

கொடியேற்றமானது ஆடி அமாவாசையிலிருந்து 6ஆம் நாள் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து இருபத்தைத்து நாட்கள் மிக விமர்சையாக நடைபெறுகின்றது. பத்தாம் நாள் மஞ்சத் திருவிழாவும் பதினேழாவது திருவிழா கார்த்திகை உற்சவமும் இருபதாவது திருவிழா கைலாச வாகனத் திருவிழாவும் இருபத்திரண்டாவது திருவிழா தண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா) இருபத்தி நான்காம் திருவிழா தேர்த்திருவிழாவும், இருபத்தைந்தாவது நாள் திருவிழா தீர்த்தோற்சவமாகவும் உள்ளன. நல்லூரில் இருபத்தாறாவது நாள் அன்று நடைபெறுகின்ற பூங்காவனத் திருவிழாவானது விசேடமாகவும் சிறப்பாகவும் நடைபெறும். இந்த திருவிழாக் காலங்களில் நல்லூர் பூகோளக் கைலாயமாகக் காட்சியளிக்கும்.

**எந்த மயமும் கந்த மயம்**

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழா ஆரம்பித்து விட்டால் அதன் அதிர்வு யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் காணப்படுகின்றது. எந்த மயமும் கந்த மயமாகவே காட்சிய ளிக்கும். கந்த வேலனின் திருவிழா நடை பெறும். இருபத்தைந்து தினங்களும் தினந் தோறும் விரதம் அனுஷ்டித்து திருக்கோவி லுக்குச் சென்று வலம் வந்து திருவிழாவில் பங்கு பற்றி முருகன் அருள் பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகை அளவிட முடியாது.

**அவனருளாலே அவன் தான் வணங்குவோம்**

முருகனே, மாயோன் முருகனே, நருகை முகன் தம்பியே உன் திருச்சந்நிதியில் வந்து நின்றாலே பெரியோர், சிறியோர், இளைஞர், முதியோர், கற்றார், தீயோர், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் முருகன் அடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தம்மை மறந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின்றனர்.

எங்கு பார்த்தாலும் முருகப் பெருமானைப் போற்றும் நினைவு முதிர்ச்சியால் அனைத்திலும் முருகனின் பாடல்களே ஒலிக்கின்றன. அவன்மீதான பெரும் நம்பிக்கையால் நாளும் அவனை வழிபட்டு வாழ்கின்றார்கள்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சைவப் பெருமக்களின் தனித்துவமான பக்தியின் கருவூலமாகத் திகழ்கின்றதென்றால் வியப்பில்லை. இன்றைய தினம் நடைபெறும் இரதோற்சவத்தில் கந்தன் தேர் வடம் பிடித்து அவன் தாள் எமது பிணிகளை நீக்கிக் கொள்வோமாக...!

**மதுரகவி**
**காரை, எம்.பி.அருளானந்தன்**

## ஆறுமுகா ஏறுமுகமென்று சங்கை முழங்கச் சொல்லிவிடு



நல்லூரா நின்னடியைத் தொழுதுவரப்
பொல்லாப்பு இல்லையென்றார் யோகர்.

அலங்காரா எங்கள் நிலையை
விளங்காரா ஒருபோதும் வீணர்.

திருக்குமரா தினசரி கேட்டும்
தீர்க்காரா பிரச்சனையைத் தீயர்.

சங்கரா உரிமை தராதவர்
சரியாரா ஆசனத்தில் அற்பர்.

தினகரா எவனும் இல்லையென்ற
திமிராலா திமிறுகிறார் துவேசர்.

திருக்குமரா நீதான்எங்கள் மீட்பர்.
செந்தூரா உன்சொல்லை அவர் கேட்பர்.

அரகரா அரோகரா அதிதீரா ஆறுமுகா
சங்காரா தேரேறும் சண்முகா சரவணா

முழங்க வா முழங்கவா சங்கு.
முருகா ஆடிவா ஓடிவா இங்கு.
முதல்வா உன்னால் நீங்கிவிடும் தீங்கு.

- மகேசன் கஜேந்திரன்.

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** *திருகோணமலை மாவட்ட தமிழ் அரசு கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனை கட்சி ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானம் எடுத்துள்ளதுடன், சுமந்திரன் - சாணக்கியன் அணியை விமர்சித்திருக்கிறார்களாமே?.*

**வியுக்தியார்:** ஏற்கனவே தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் சிலர் சொல்லியிருந்தார்களே, தமிழ் மக்கள் விரும்புகின்ற விடயத்தைத்தான் தமிழ் அரசு செய்யும் என்று. அதுதான் போலும் தமிழ் மக்கள் பொதுவேட்பாளரை ஆதரிக்க தயாராகிவிட்டதை தெரிந்துகொண்டுதான் தமிழ் அரசின் திருமலை கிளையின் முக்கியஸ்தர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் போலும். இப்போதும் தமிழ் மக்களோடு இல்லாமல், ஒருசில தொண்டர்களுடன் மாத்திரம் தொடர்பில் இருப்பவர்களுக்கு தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது தெரியப்போவதில்லையே. அதுதான் அவர்கள் இப்போதும் பொது வேட்பாளரை எதிர்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** *நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளர் போட்டியிடுவதை நான் முழுமையாக ஆதரிக்கிறேன் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் (அருண்) தம்பிமுத்து தெரிவித்துள்ளாரே. அவர் எதற்காக 'நான் ஆதரிக்கின்றேன்" என்று அழுத்தமாக கூறுகிறார்?*

**வியுக்தியார்:** கட்சியின் தலைவர் அவர்தான் என்றாலும், கட்சியின் சர்வ அதிகாரம்கொண்ட பொதுச்செயலாளராக ஐயா ஆனந்தசங்கரிதானே இப்போதும் இருக்கிறார். அவர்தான், சுமந்திரன் பாணியில் பொது வேட்பாளர் விடயம் முட்டாள் தனமானது என்று தெளிவாக சொல்லிவிட்டாரே. அதுதான் கட்சியின் புதிய தலைவரான நமது அருண், தான் முழுமையாக ஆதரிக்கின்றேன் என்று கூறியிருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** *13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் ஒரே நாட்டுக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றும் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். அந்த புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை 13 ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த தனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதே. அது சாத்தியமானது என்று நீங்கள் நம்புகின்றீர்களா?*

**வியுக்தியார்:** இப்படியொரு கேள்வி உங்களுக்கு கேட்கத் தோன்றியதிலிருந்தே உங்களுக்கும் அது பற்றிய ஒரு சந்தேகம் இருக்கின்றது என்பது தெரிகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அந்த ஆசனத்தில் அமருவதற்கு முன்னர் இப்படிச் சொன்னவர்கள் பலர். ஆனால் அதில் அமர்ந்த பின்னர் அந்த 'சுகம்" அவர்களை அதையெல்லாம் மறக்கப்பண்ணிவிடும். அது மாத்திரமல்ல, இவற்றையெல்லாம் செய்வதற்கு ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் மாத்திரம் போதாது. பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்பது மாத்திரமல்ல, அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றையும் நடாத்தி மக்களின் ஆணை யையும் பெறவேண்டியிருக்கும். இவையெல்லாம் நடக்கக்கூடிய நிலமை ஒன்று ஏற்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** *தமிழ் பொதுவேட்பாளர் முயற்சியால் தமிழர்களின் சுயாட்சிக் கோரிகையே பலவீனமடையப் போகின்றது எனவும், தமிழ் பொதுவேட்பா ளரை களமிறங்கிய தரப்புகள் கூட சஜித்துக்கே வாக்களிப்பார்கள் எனவும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளாரே. அவர் இப்படிச் சொல்வதன் மூலம் எதனைச் சொல்லவருகிறார்?*

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. தமிழ் பொதுவேட்பாளர் கணிசமான வாக்குகள் பெறப்போவதால், 2005ல் ரணில் வெற்றியை தவறவிட்டதுபோல இந்த தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றியைத் தவறவிட்டுவிடுவாரோ என்ற பயம் அவருக்கு. இந்தத் தடவையும் தாம் ஆதரிக்கின்றவர் வெற்றிபெறாவிட்டால் இன்னுமொரு ஐந்து வருடங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர அவரால் முடியாதல்லவா. அதுதான் மனுசன் கொஞ்சம் பதட்டப்படுகிறார். அதுகூட பரவாயில்லை தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கை பலவீனப்பட்டுவிடும் என்றுகூட கண்ணீர்வடிக்கிறார். அதன்மூலம் அவர் சொல்ல வருவது, பலவீனப்பட்டுவிடாமல் தமிழர்கள் பொதுவேட்பாளருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று சொல்கிறார் என்று நாம் எடுத்தக்கொள்வோமே.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** *ஒற்றையாட்சி முறையை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பை ஏற்படுத் துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் அறிக்கையில் வெளியிட்டால் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பது என்ற எமது நிலைப்பாட்டை பரிசீலனை செய்யமுடியும் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சஜித் பிரேமதாஸவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாமே.*

**வியுக்தியார்:** அவர்கள் ஒரு நாடு இருதேசம் என்ற கொள்கையை அடைவதற்கு வழிவரைபடம் இல்லாமல் போராடுவதுபோல, சமஷ்டி அரசியல் யாப்பை எப்படி கொண்டுவருவேன் என்று சஜித் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை கொண்டுவருவேன் என்று சொன்னால் போதும் என்கிறார்கள் போல் தெரிகின்றது. இவர்கள் எப்போதும் இப்படித்தான், தமது ஒரு சில ஆயிரம் வாக்குகளுக்காக எண்பது வீதமான சிங்கள மக்களின் வாக்குகளை இழக்குமாறு சஜித்துக்கு சொல்கிறார்கள். தங்களைப்போலவே சஜித்தும் முடிவெடுப்பார் என்று நம்புகின்றார்களோ அல்லது அப்படி செய்வதன்மூலம் வேறு யாரையும் வெல்ல வைக்கலாம் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லையே.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** *'பலமான கட்சியாக இருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியின் இன்றைய பரிதாப நிலைக்கு ஒருவரே காரணம். கட்சியை பிரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியவர் அவரே. நான்கூட அந்தக் கட்சியிலிருந்தே வெளியேறினேன். நான் வெளியேறுவதற்கும் அவரே காரணம். அந்தக் கட்சியிலிருந்து மேலும் பலர் வெளியேறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" - என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சிவி விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளாரே?.*

**வியுக்தியார்:** ஒரு கட்சியின் தலைவரான பின்னர் அவர், மற்றுமொரு கட்சியின் உள்விவகாரங்களில் கருத்துச் சொல்வது அழகல்லவே. இருந்தாலும் தமிழ் அரசு கட்சி இப்போது பரிதாப நிலையில் இருக்கின்றது என்று சொல்வதும், கட்சியை பலவீனமடையச் செய்யும் ஒரு உத்திதான். அதற்காகத்தான் அவர் அப்படிச் சொல்கிறாரா அல்லது, அந்தக் கட்சியில் இருக்கும் 'அந்த" ஒருவரை பலவீனப்படுத்துவதற்காக அப்படிச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. ஆனால் அவரது கட்சியிலிருந்து ஒதுங்கி இருக்கும் அருந்தவபாலனும் இவரைப்பற்றியும் பொதுவெளியில் பேசிவருவதையும் இவர் கவனத்தில் கொள்ளவேண்டாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈழநாடு



# பசுபிக் தீவுகள் பேரவை மாநாடு:

## சீனாவை புறந்தள்ளிய அவுஸ்திரேலியா ஒப்பந்தம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



18 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட "53வது பசிபிக் தீவுகள் பேரவை" (53rd Pacific Islands Forum) தலைவர்கள் கூட்டம் டோங்கா நாட்டில் உள்ள நுகுஅலோவாவில் (Nuku'alofa, Tonga) ஆகஸ்ட் 26இல் தொடங்கியது.

இக் கூட்டத்திற்கு டோங்காவில் உள்ள உயர்மட்ட பிரதிநிதிகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கலந்து கொண்டார். இக் கூட்ட கலந்துரையாடலுக்கான நிகழ்ச்சி நிரலில் காலநிலை, பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார நிலைமை ஆகியவற்றை உள்ளடக்கியது.

பசிபிக் தீவுத் தலைவர்களுக்கும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸுக்கும் இடையிலான சந்திப்பே மிக முக்கியமான சந்திப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பசிபிக் தீவு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கான இந்த மாநாட்டில் அவுஸ்திரேலியாவின் வளர்ந்து வரும் உறவுகளை அடிப்படையாக வைத்து பல பொருளாதார உதவிகள் நாட்டப்படும் என கருதப்படுகிறது.

இந்த மாநாட்டில் சிறிய தீவுகள், மற்றும் வளரும் மாநிலங்கள் எதிர்கொள்ளும் சுற்றுச் சூழல் சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

காலநிலை மாற்றத்தை புரிந்து கொள்ளுதல், ஒத்துளைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கை ஆகியவற்றை வளர்க்கும் ஒரு சூழலை ஊக்குவிக்க இந்த மாநாடு வழி வகுக்கும். அத்துடன் பூமியின் தட்பவெப்ப நிலை மாற்றத்தை தணிக்கவும், பிராந்திய ஒத்துளைப்பு மற்றும் நிபுணத்துவ பரிமாற்றத்தை ஊக்குவிக்கவும், காலநிலை பின்னடைவை கட்டுப்படுத்த நடவடிக்களை மேம்படுத்தவும் இந்த மாநாடு உதவும் என கருதப்படுகிறது.

**பசிபிக்கில் சீன ஆதிக்கம்:**

பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்து வரும் இருப்பை எதிர்கொள்ள வடிவமைக்கப்பட்ட 400 மில்லியன் டாலர் அளவிலான பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு பசிபிக் தலைவர்களின் ஆதரவைப் பெற்று, அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் குறிப்பிடத்தக்க இராஜதந்திர வெற்றியைப் பெற்றுள்ளார்.

ஆயினும் சில பசிபிக் நாட்டு தலைவர்களின் அழுத்தம் இருந்தபோதிலும், அவர்கள் இந்த ஒப்பந்தம் "மறைவானது"

> **பசிபிக் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவை பிராந்தியத்தின் முதன்மைப் பாதுகாப்புப் பங்காளியாக மாற்றும் முயற்சியை சீனா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஆயினும் தொலைநோக்குப் பார்வையில் பசிபிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சீனாவை ஓரங்கட்ட அவுஸ்திரேலியா முனைகிறது**

என்றும், அமெரிக்கா தலைமையிலான சீனா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையிலான வல்லரசு போட்டியில் பசிபிக் சிக்க வைக்கும் அபாயம் இருப்பதாகவும் கூறினர்.

டோங்கா நாட்டில் பசிபிக் தீவுகள் மாநாட்டில் அல்பானீஸ் மற்றும் மூன்று சக தலைவர்கள் இந்த ஒப்பந்தம் மன்றத் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்தனர்.

இந்த பாதுகாப்பு முயற்சி "பசிபிக் தலைமையில்" இருக்கும் என்று வலியுறுத்தும் அதே வேளையில், இந்த முயற்சிக்கு அவுஸ்திரேலியா முக்கிய நிதியளிப்பதாக இருக்கும். ஒப்பந்தத் திற்காக ஐந்து ஆண்டுகளில் கூ400 மில்லியன் செலவழித்து, பிரிஸ்பேனில் உள்ள அவுஸ்திரேலிய மத்திய போலீஸ் வசதிகளில் ஒரு புதிய ஒருங்கிணைப்பு மையத்தை அமைக்கும்.

இந்த முயற்சியானது பப்புவா நியூ கினியாவில் தொடங்கி பசிபிக் முழுவதும் நான்கு பிராந்திய பயிற்சி மையங்கள் நிறுவப்படும். மேலும் இயற்கை பேரழிவுகள் அல்லது பிற நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஒரு புதிய பன்னாட்டு நிலைப் பொலிஸ் பிரிவு உருவாக்கப்படும் என அறியப்படுகிறது.





**பசிபிக் இராஜதந்திரம்**

தொலைநோக்குப் பார்வையில் பசிபிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சீனாவை ஓரங்கட்ட அவுஸ்திரேலியா முனைகிறது.

பசிபிக் பகுதியில் தனது செல்வாக்கை விரிவுபடுத்த பெய் ஜிங்கின் ஆற்றல் மிக்க முயற்சிகளை அடிக் கோடிட்டுக் காட்டும் வகையில், கடந்த வாரம் புதன்கிழமையன்று தலைவர்களின் கூட்டம் சீனாவால் நிதியளிக்கப்பட்ட ஒரு உயர் நிலைப் பள்ளி விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

அதனை டோங்காவுக்கான சீனத் தூதுவர் மற்றும் டோங்காவின் பட்டத்து இளவரசரால் கடந்த வாரம் திறக்கப்பட்டது. தற்போது புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் முன்னேற்றம் பெய்ஜிங்கைத் புறந்தள்ளி கீழ் வரிசைப்படுத்தியுள்ளது.

இந்த ஒப்பந்தம் சர்வதேச உறவுகளில் பொதுவான கொள் கைகளை மீறுவது மட்டுமல்லாமல், பசிபிக் நாடுகளின் பங்காளிகளை சுயாதீனமாகத் தேர்ந் தெடுக்கும் இறையாண்மையை மீறுகிறது என சீனா விமர்சித்துள்ளது.

**சீனா கடும் விமர்சனம்**

பசிபிக் தலைவர்கள் அவுஸ்திரேலியாவை பிராந்தியத்தின் முதன்மைப் பாதுகாப்புப் பங்காளியாக மாற்றும் முயற்சியை சீனா ஒருபோதுத் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சீனாவின் காவல்துறை முன்பு பிஜி மற்றும் கிரி பாட்டி போன்ற பசிபிக் நாடுகளுக்குள் நுழைந்து பணியாற்றியது. தற்போதும் பப்புவா நியூ கினியா போன்ற நாடுகளு டன் காவல் ஒப்பந்தங்களை தக்க வைக்க முயல்கிறது.

இந்த பாதுகாப்பு முயற்சியானது பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தவும், தேவைப்படும் நேரங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் இணைந்து செயல்படும் என ஆஸி பிரதமர் அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில், அவுஸ்திரேலியா தங்கள் பாதுகாப்பு பங்காளியாக உள்ளமை, குறிப்பாக புவிசார் மூலோபாய நலன்கள் மற்றும் புவிசார் மூலோபாய பாதுகாப்புக்கு ஏற்றதாக உருவாக்கப்பட்டுள்ளது என்று பசுபிக் தலைவர்கள் கூறினர். பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு போன்ற சிக்கலான மற்றும் உணர்திறன் வாய்ந்த ஒன்றை ஒப்புக் கொள்வதற்கு பல வேறுபட்ட நாடுகள் ஒன்றிணைவது எளிதான விஷயம் அல்ல என்றும் கூறினர்.

**புதிய அமெரிக்க தூதரகம்**

அவுஸ்திரேலியா இதை பிராந்தியத்திற்கான வெற்றியாகவும், பசிபிக் தீவு நாடுகளுக்கான முக்கிய பாதுகாப்பு பங்காளியாக அவுஸ்திரேலியாவின் பங்கை அங்கீகரிப்பதாகவும் அமையும்.

இதேவேளை அமெரிக்காவின் மிக முக்கியமான வெளிநாட்டு காவல்துறை அதிகாரிகளில் ஒருவரான, வெளியுறவுத் துறை துணைச் செயலர் கர்ட் கேம்ப்பெல், இந்த மாநாட்டிற்காக டோங்காவில் தங்கி இருக்கிறார். பிராந்தியத்தில் அமெரிக்காவின் புதுப்பிக்கப்பட்ட கவனத்தை இவரின் வருகை பிரதிபலிக்கிறது.

அத்துடன் அவர் தனது பயணத்தின் போது, காம்ப்பெல் வனுவாட்டுவில் ஒரு புதிய அமெரிக்க தூதரகத்தையும் திறப்பார் என கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாயில் கைதானவரின் வீட்டில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, செப். 01

டுபாயில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட சந்தேக நபரின் வீட்டிலிருந்து கைக்குண்டு, போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன என்று குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாதாள உலகக்குழு சந்தேகநபர் ஒருவர் கடந்த 29ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

இதன் பின்னர், சந்தேக நபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வீட்டின் பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு மற்றும் 310 கிராம் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், மத்துகம பிரதேசத்தில் பெண் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ரூ. 15,200 கோடி திறைசேரி உண்டியல் ஏலமிடப்படும்!

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, செப். 01

15 ஆயிரத்து 200 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 4ஆம் திகதி ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 6 ஆயிரத்து 200 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வில்லியம் கோபல்லாவ....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டி யதன் பின்னர், சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத் துவத்தை மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவம் மைத்திரிபால சிறிசேன வசமானதை அடுத்து, ராஜபக்ஸ குடும்பம் அந்த கட்சியிலிருந்து வெளியேறி சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியை ஸ்தாபித்தது.

கூட்டணி அரசின் தலைமை பொறுப்பு அதாவது ஜனாதிபதி பதவி சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும், பிரதமர் பதவி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வசப்படுத்தப்பட்டது.

ஒரு கட்டத்தில் இரு கட்சிகளுக்கும் இடையே அதிருப்தி ஏற்பட, ஜனாதிபதியாக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பதவியை ரணிலிடமிருந்து பறித்து மஹிந்த ராஜபக்ஸவிற்கு கையளித்தார்.

இதையடுத்து, இலங்கையில் அரசியலமைப்பு குழப்ப நிலைமையொன்று ஏற்பட்டு, ரணில் விக்ரம சிங்க மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

2019ம் ஆண்டு சிறிலங்கா பொதுஜன பெரமுன முதல் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டது.

அதேபோன்று, எதிரணியில் ஐக்கிய தேசியக் கட்சியி லிருந்து பிளவுப்பட்ட தரப்பினர் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியிருந்தனர்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஸவை எதிர்த்து போட்டியிட்டது.

பொது வேட்பாளர் என்ற கருப்பொருள் 2019ம் ஆண்டு தேர்தலில் இல்லாது போனது. கூட்டணியா கவே கட்சிகள் அப்போது போட்டியிட்டன.

இந்த தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸ மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தார். எனினும், கோவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என பல்வேறு சவால்களை கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சி காலத்தில் இலங்கை எதிர் நோக்கியது.

இதையடுத்து, நாடு முழுவதும் அரச எதிர்ப்பு போராட்டங்கள் தீவிரமடைந்ததை அடுத்து, கோட்டா பய ராஜபக்ஸ தனது பதவியை துறந்தார்.

அதனைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரம சிங்க, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளை பெற்று இடைக் கால ஜனாதிபதியாக பொறுப் பேற்றுக்கொண்டார்.

இவ்வாறான பின்னணியில், 2024ம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது.

# பாதாள உலக குழுவை சேர்ந்த இருவர் கைது!

கொழும்பு, செப். 01

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "சேதவத்தை ககுன்" என்பவரின் உதவியாளர்கள் இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கொழும்பு கிராண்ட் பாஸில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 4 தோட்டாக்கள் மற்றும் 21 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் பாதாள உலகக் கும்பலை சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான "சேதவத்தை ககுன்" என்பவருக்குச் சொந்தமான போதைப்பொருட்களை பல்வேறு பிரதேசங்களில் விற்பனை செய்து வந்தனர் என்பது தெரிய வந்தது.

சந்தேகநபர்கள் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# தமிழ்ப் பொது வேட்பாளர்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது நம்பிக்கைக்குரியவராகச் சுமந்திரனால் முன்மொழியப்பட்ட, தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ள குகதாசன் தனக்கு ஆதரவான முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுச்சபை உறுப்பினர்களைக் கொண்டு தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆதரவுத் தீர்மானத்தை நிறைவேற்றி சுமந்திரனின் முகத்தில் நேரடியாகவே அறைந்துவிட்டார். இது போன்ற தீர்மானங்களை இன்னும் நிறைய எதிர்பார்க்க முடியும். என்ன செய்வது? அரசியலில் அதிகாரம் போனால் கூட இருப்பவர்கள் செத்த மாட்டு உண்ணிகள்தானே. இவற்றையெல்லாம் வெட்டியாடக்கூடிய சம்பந்தன் என்ற துருப்புச் சீட்டும் இப்போது சுமந்திரன்வசம் இல்லாமல் போய்விட்டதே. இவ்வாறு சுமந்திரன் நாளாந்தம் தனிமைப்படுத்தப்பட்டு வருவதால் அவர் உட்பட பொதுவேட்பாளரை எதிர்க்கும் தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினர் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டுமென்பதை அவர்களின் முடிவுக்கே விட்டுவிடும் தீர்மானத்து வரும் வாய்ப்புகளே அதிகம் தென்படுகின்றன.

# பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது பொறுப்பு முடிந்துவிடுகிறது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நினைக்க முடியாது. 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவ தற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு அவர்கள் ஒன்றிணைந்து செயற்படவும் வேண்டும். அதற்கு இசை வான சூழ்நிலையை உறுதி செய்வதற்கு அரசியல் தந்திரோபாயத்தை கையாள வேண்டும்.

தற்போது மூன்று பிரதான வேட்பாளர்களும் 13 வது திருத்தத்துக்கு அனுகூலமான நிலைப்பாட்டை எடுத்திருப்பதால் அவர்களுடன் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களில் எவர் ஜனாதிபதியாக வந்தாலும் மற்றைய இருவரும் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எதிர்கால முயற்சிகளை எதிர்க்காமல் இருப்பதற்கான உத்தரவாதத்தைப் பெறவேண்டும். இன்றைய சூழ்நிலையில் அது ஒரு விவேகமான தந்திரோபாயமாக இருக்க முடியும்.

இந்த கட்டுரையாளர் ஒன்றும் 13 வது திருத்தத்தின் ரசிகர் இல்லை. ஆனால், நிலையான தீர்வாக அமையக் கூடிய சமஷ்டி ஏற்பாட்டை நோக்கிய பயணத்தில் முதற்படியாக அந்த திருத்தத்தை கருதும் தமிழ்க்கட்சிகள் அத்தகையதொரு தந்திரோபாயத்தை கடைப்பிடிப்பதில் என்ன தவறு இருக்கப் போகிறது?

இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடான 13 வது திருத்தத்தை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கூறுகின்ற பிரிவினரும் தமிழ் அரசியல் சமுதாயத்திற்குள் கணிசமாக இருக்கிறார்கள். எதிர்காலத்தில் கொழும்பு அரசாங்கம் ஒன்று அந்த திருத்தத்தை ஒழித்துவிட்டால் அதைப் போன்ற அல்லது அதையும் விட குறைவான ஏற்பாடுகளுடன் கூடிய ஒன்றை மீண்டும் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கக்கூடிய அரசியல் வல்லமை இன்று தமிழ் மக்களிடம் இருக்கிறதா? இந்த கேள்விக்கு இதுவரை பதில் இல்லை. கனவுலக அரசியல் செய்வது சுலபம். ஆனால் நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறைகளைப் பற்றி சிந்திப்பதே இன்று தமிழ் மக்களுக்கு முக்கியமானது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை நிறைவு செய்து புதிய அரசியலமைப்பை கொண்டுவருவது குறித்து அநுரா குமார தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அந்த செயன் முறையின் போது 13 வது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளையும் விட மிகவும் விரிவான அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஆராயப்பட்டதாக அன்றைய எதிர்க்கட்சி தலைவர் காலஞ்சென்ற இரா. சம்பந்தனும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் அடிக்கடி கூறினார்கள். அதனால் 13 வது திருத்தத்தைப் பற்றி இனிமேலும் பேசிக்கொண்டிருக்கவேண்டியதில்லை என்பதும் அவர்களது எண்ணமாக இருந்தது. ஆட்சிமாற்றம் காரணமாக துரதிர்ஷ்டவசமாக அந்த அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் பிரதமர் விக்கிரமசிங்க இடைக் கால அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இடையில் நின்றுபோன அந்த செயன்முறையை நிறைவு செய்யப் போவதாக தேசிய மக்கள் சக்தி கூறியிருப்பதால் அவர்களின் விஞ்ஞாபனத்தில் 13 வது திருத்தம் குறித்து பிரத்தியேகமாக குறிப்பிடப்படாதது ஒரு குறைபாடு அல்ல என்ற அபிப்பிரா யத்தைக் கொண்ட தமிழ் அரசியல்வாதி களும் இருக்கிறார்கள்.

ஆனால், மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக 13 வது திருத்தம் கூட ஒழுங்காக நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்துவந்த சூழ்நிலையில் அந்த திருத்தத்துக்கு அப்பால் செல்வது குறித்த எதிர்பார்ப்புக்களை தமிழ் அரசியல் கட்சிகள் வளர்த்து வந்திருக்கின்றன. அதற்கு இந்தியாவின் தலையீட்டை கடுமையாக எதிர்த்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இந்தியாவை அவமதிப்பதற்காக 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு கையாண்ட ஒரு தந்திரோபாயமே முதல் காரணம்.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்கு பின்பு மீண்டும் உள்நாட்டுப்போர் மூண்ட சூழ்நிலைகளில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு அன்றைய சிறிலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க தலைமையில் ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. அதில் இருந்தே 13 வது திருத்தத்துக்கு அப்பால் செல்லமுடியும் என்ற நம்பிக்கை தமிழ்க்கட்சிகளுக்கு ஏற்படத் தொடங்கியது.

உண்மையில் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு பிரேமதாச கையாண்ட ஒரு தந்திரோபாயமே அதுவாகும். அதற்கு பின்னரும் சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோரும் 13 வது திருத்தம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப் படாமல் இருப்பதை உறுதி செய்து கொண்ட அதேவேளை வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர். ஆனால் எதுவுமே நிறைவுபெறவில்லை. பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் அறிக்கையை மகிந்த ராஜபக்ச ஒரு போதும் வெளியிடவில்லை.

இந்த அனுபவங்களை எல்லாம் படிப்பினையாக எடுத்துக் கொண்டு 13 வது திருத்தமாவது தற்போதைக்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யக்கூடிய தந்திரோபாயத்தை தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கடைப்பிடிப்பதே விவேகமானது.

ஆனால், இந்த கருத்து வடக்கில் கனவுலக அரசியல் செய்யும் ஒரு பிரிவினரின் பரிகாசத்துக்கு உள்ளாகும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரானுக்கு...

கடந்த ஓகஸ்ட் 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதில், 24ஆம் திருவிழாவான இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

இன்றைய தேர்த் திருவிழாவில் வெளிநாடுகளிலிருந்தும் நாட்டின் பிறபாகங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் பங்கேற்பார்கள் என்று கருதப்படுகின்றது. இதையொட்டி சிறப்பு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், குடிதண்ணீர், அன்னதானம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு, சுகாதார நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட் டுள்ளன.

இதேவேளை, 25 ஆம் திருவிழாவான நாளை திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 4.30 மணிக்கு கொடியிறக்கத்துடன் பெருந்திருவிழா நிறைவு பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவன திருவிழா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காணாமல்...

செய்கையை அனுமதிக்க முடியாது.

நாங்கள் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்தவுள்ளோம். நாங்கள் அது குறித்து வர்த்தமானியில் அறிவித்துள்ளோம். நாங்கள் உள்நாட்டு பொறிமுறையை முன்வைக்கவுள்ளோம் - அதன் மூலம் தீர்வை வழங்குவோம். நாங்கள் ஏனையவர்கள் வந்து இதற்கு தீர்வை வழங்குவதற்கு அனுமதிக்கப் போவதில்லை.

தங்கள் அன்புக்குரியவர்களை காணவில்லை என்று 2000 - 2009 ஆண்டுக்குள் 6 ஆயிரத்து 75 பேரே முறைப்பாடளித்துள்ளனர். இவர்களில் 5 ஆயிரத்து 776 பேர் காணாமல் போனோர் பணிமனையை (ஓ. எம். பி) தொடர்பு கொண்டுள்ளனர் - அதாவது 96 வீதத்தினர். இது இலங்கை அதிகாரிகளின் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. நாங்கள் இந்த விடயத்தில் செயல்படுகிறோம். அவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்று கூறினார்.

அமைச்சரை நேர்கண்டவர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகம் என்று கூறப்படுகிறதே என்று சாரப்பட எழுப்பிய வினாவுக்கு பதிலளித்த அமைச்சர்,

“உங்களுக்கு எவ்வாறு இந்த எண்ணிக்கை கிடைத்தது - யார் இதனை சொன்னது? - இது வெறும் குப்பை - மேற்குலகின் முட்டாள்தனம்”, என்று கோபத்துடன் தெரிவித்தார்.

மேலும், காணாமல் போனோர் பணிமனையை அமைத்துள்ளோம். 97 ஆயிரம் பேர் அந்த பணிமனைக்கு சென்றுள்ளனர். நாங்கள் அவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். ஒரே இரவில் இவ்வாறான பிரச்னைக்கு தீர்வு தரமுடியாது - என்றார்.

நேர்கண்டவர், “ஆனால், 15 வருடங்களாகி விட்டனவே?”, என்று கூறியதற்கு, “என்ன 15 வருடங்கள் - நீங்கள் கனடாவை கேளுங்கள் 200 வருடங்களின் பின்னர் தனது சுதேசிய மக்களிடம் மன்னிப்பு கோருகின்றது. நெதர்லாந்து எங்களின் தொல்பொருட்களை 300 வருடங்களின் பின்னர் திருப்பித் தந்தது. 15 வருடங்கள் என்பது நீண்டகாலமா? நாங்கள் பெரும் முன்னேற்றத்தை கண்டுள்ளோம்.

96 வீதமான நிலத்தை திருப்பி கொடுத்துள்ளோம்? 12 ஆயிரத்து 917 பேருக்கு புனர்வாழ்வளித்துள்ளோம். முழு உட்கட்டமைப்பையும் உருவாக்கினோம்.

இலங்கை படையினர் 26 ஆயிரம் பேரை இழந்தனர். ஆனால், நாங்கள் விடுதலைப் புலிகளின் 12 ஆயிரம் உறுப்பினர்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தவில்லை. இது அரசியல் மோதல் கைமீறிப் போய் பயங்கரவாத அமைப்பாக மாறியது. ஏன் அவர்கள் எங்களை ஏனைய விடயங்களை செய்யுமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்? என்றார். (ஐ)

## இளம்...

கடை ஆரம்பித்துள்ளார். இருப்பி னும் வியாபாரம் இல்லாத நிலையில் கடையினை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் வாங்கிய கடனை அடைக்க முடியாமையினால், கடன் வழங்குநர்களால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்.

இந்நிலையில், நேற்று தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அமைச்சர்...

உறவுகள் காணாமல் போயுள்ளனர் என்று 6 ஆயிரத்து 47 பேர் மாத்திரமே முறைப்பாடு செய்துள்ளனர்”, என்று கூறியிருந்தார். இது தொடர்பில் அலன் கீனன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்ட கருத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அந்தப் பதிவில்,

“இந்த எண்ணிக்கை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திய வெளிப்படைத் தன்மையற்ற அதிகாரத்துவ பொறிமுறைகளின் புள்ளிவிவரங்களை அடிப்படையாக கொண்டிருக்கலாம். 2000ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு என்பது 1970களின் பிற்பகுதியில் (இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர்) ஆரம்பித்த அரசாங்கத்துக்கும் தமிழ் போராளிகளுக்கும் இடையிலான கிளர்ச்சி, கிளர்ச்சி எதிர்ப்பு யுத்தத்தின் ஈவிரக்கமற்ற ஒரு சிறிய காலம் மாத்திரமே.

இந்த காலப்பகுதியில் பல ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். தங்கள் குடும்பத்தவர்களை காணவில்லை என முறையிட்ட 6 ஆயிரத்து 47 பேரில் சிலர் அல்லது பலர் குடும்பத்தில் பலரை இழந்திருக்கலாம். எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த முறைப்பாடுகளைவிட கணிசமான அளவு அதிகமாக இருக்க லாம்.

பல தசாப்தங்களாக ஆணையங்கள் குழுக்கள் மற்றும் பல்வேறு பிற தகவல் சேகரிப்பு செயல்முறைகளுக்கு பிறகு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பல குடும்பங்கள் சோர்வடைந்துள்ளன - சலிப்படைந்துள்ளன - கோபமடைந்துள்ளன - தாங்களாகவே இறந்துவிட்டன அல்லது பொலிஸ் மற்றும் இராணுவத்தால் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன - இதனால், முறைப்பாடு தெரிவிப்பவர்களின் எண்ணிக்கை குறைகிறது.

இடதுசாரி சிங்கள ஜே. வி. பியின் இரண்டு கிளர்ச்சிகளின்போதும் ஆயிரக் கணக்கானவர்கள் அரச படையினர் துணை இராணுவ குழுக்களால் காணாமலாக்கப்பட்டனர் என்பது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இவை குறித்து மிகச்சிறிய எண்ணிக்கையிலான வழக்கு விசாரணைகள் மாத்திரம் நடைபெற்றுள்ளன - சில உண்மைகள் மாத்திரம் வெளிவந்துள்ளன.

நான்கு தசாப்தகால வன்முறைகளின்போது அனைத்து இனங்கள் - மதங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒரு சிலரின் தலைவிதி குறித்துக்கூட உத்தியோகபூர்வமான தீர்மானங்கள் எதுவும் வெளியாகவில்லை - அரசாங்கம் பொறுப்பேற்கவுமில்லை - நீதி வழங்கப்படவுமில்லை.

பல தசாப்தங்களாக உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த வேண்டுகோள்களுக்கு இலங்கை அரசாங்கங்கள் அளித்து வரும் மறுப்பு மற்றும் பொறுப்பை திசைதிருப்பும் பதிலையே இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் பேட்டியில் வழங்கியுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களும் இலங்கையர்களும் இதனைவிட சிறந்த பதில்களுக்கு உரித்துடையவர்கள் - என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)

# போராட்டங்களை முன்னெடுப்பதற்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு!!

வவுனியா, செப்.1

வவுனியாநகரில் இன்றையதினம் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதற்கு காணாமல்ஆக்கப்பட்டோர் சங்கங்களை சேர்ந்த நால்வருக்கு வவுனியா நீதிமன்றம் தடை பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக இன்று வவுனியா வருகைதரவுள்ளார்.

இந்நிலையில் பொலிசாரால் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் குறித்த நான்கு பேருக்கும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி சிவாநந்தன் ஜெனிற்றா, தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் கோபால கிருஸ்ணன் ராஜ்குமார், அந்த சங்கத்தின் தலைவிகாசிப்பிள்ளை ஜெயவனிதா, மற்றும் காணாமல்போன அமைப்பை சேர்ந்த சண்முகநான் சறோஜாதேவி ஆகியோருக்கே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நால்வரும் வவுனியா நகரில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இன்று காலை 6.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிவரையான காலப்பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் என்பனவற்றை மேற்கொள்வதற்கு குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 106(01) இன் கீழ் தடை விதிக்கப்படுவதாக நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடைஉத்தரவு பத்திரங்கள் அந்தந்த பிரிவுகளைசேர்ந்த பொலிசாரால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## வாக்காளர்...

எதிர்வரும் 02 ஆம் திகதி காலையிலிருந்து தபால் ஊழியர்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு சென்று வாக்காளர் அட்டை அடங்கிய பொதிகளை உரிய முகவரிகளுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பணிகளுக்கு தபால் திணைக்களத்திற்கு உரித்தான வாகனங்களும் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

விசேட பாதுகாப்புடன் வாக்காளர் அட்டை கொண்டு செல்லப்படவுள்ளன.

எதிர்வரும் 03 ஆம் திகதியிலிருந்து உரிய தபால் அலுவலகங்கள் ஊடாக வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

## ஐ.நா...

9ஆம் திகதி பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பின்னர் அறிக்கை தொடர்பான ஊடாடும் உரையாடல் இடம் பெறும்.

பேரவையின் தீர்மானம் 51/1 இந்த பிரகாரம் , மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலகம் தகவல்களை சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் பாதுகாக்கவும், அதன் அதன் கண்காணிப்பை மேம்படுத்தவும் அதன் ஆற்றலை நீடித்து வலுப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமை பற்றிய கண்காணிப்பை அதிகரிக்குமாறும் அலுவலகத்திடம் கோரப்பட்டது.

57ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் பேரவை ஆணை வழங்கியிருந்தது.

இதன்பிரகாரம் இலங்கை தொடர்பான ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையை பேரவை பரிசீலிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## காட்டுயானை...

மேய்ச்சல் தரையிலிருந்து அழைத்துச் செல்வதற்காக சென்றிருந்த வேளையிலேயே காட்டு யானையால் தாக்குதலுக்குள்ளாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் சடலம் வவுனியா பொதுவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மாமடு பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## நாணய...

கல்கிசையில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது ஆட்சியாளர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள விரும்புகின்றார்களே தவிர புதிய வர்த்தகங்களை உருவாக்குவதற்கு விரும்பவில்லை.

விருப்பமான இடங்களில் வணிகங்களை ஆரம்பிப்பதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உதவி செய்யும்.

நாம் அரசாங்கத்தை மாற்றுவதற்கு அல்ல இந்த நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கே வாய்ப்பைக் கோருகிறோம்.

சர்வதேச நாணய நிதியம் ரணிலுடன் எந்த ஒப்பந்தங்களையும் செய்யவில்லை.

அதன் ஒப்பந்தங்கள் அனைத்தும் இலங்கை அரசுடனே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

எனவே, தாம் இல்லை என்றால் நாடு மீண்டும் பாதாளத்துக்குச் சென்றுவிடும் என ரணில் கூறுவது முற்றிலும் பொய்யான கருத்தாகும் - என்றார். (அ)

## பதில்களை...

வருடாந்தம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை முன்னிட்டு தனது உத்தியோகபூர்வ “எக்ஸ்” தளப் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தாம் வலிந்து காணாமலாக்கப் படல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் உண்மையையும் நீதியையும் கோரும் சமூகங்களுடன் உடன் நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறியாமல் இருப்பதன் சுமை மிக அழுத்தமானது எனக் கவலை வெளியிட்டிருக்கும் அவர், இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களுக்குரிய பதில்களை அறிந்துகொள்வதற்கும், பொறுப்புக்கூறலைப் பெறுவதற்குமான உரித்தைக் கொண்டிருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## நல்லூரில் வழிபட்டார் சஜித்



யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச நேற்று சனிக்கிழமை காலை நல்லூர் ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள சஜித் பிரேமதாச நேற்றும் இன்றும் இரு தினங்களும் தங்கி இருந்து பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட உள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## யாழ். ஆயரை சந்தித்தார் சஜித்



யாழ்ப்பாணம், செப். 01

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். (அ)

# மற்றொரு கோட்டாவிடமிருந்து நாட்டை காப்பாற்றவேண்டும்!

### எம்.பி. பதவியை துறந்த தலதா அறிக்கை

கொழும்பு, செப். 01

**"பதவிகளோ, சலுகைகளோ தேவை கிடையாது, மற்றுமொரு கோட்டாபயவிடமிருந்து இலங்கையை காப்பாற்றுவதே தேவை" என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.**

கோட்டாபய ராஜபக்சவினால் உறுதிப்படுத்தப்பட்ட அந்த பயங்கரமான அனுபவத்தை வேறு பெயரில் நாம் நெருங்கக்கூடாது என பாராளுமன்றத்தில் கடுமையாக வலியுறுத்தியதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அந்த அவல அனுபவத்தை இந்த நாட்டு மக்களால் மீண்டும் தாங்க முடியுமா? சஜித் பிரேமதாசவுடன் தனிப்பட்ட பிரச்னை எதுவும் இல்லை. ஆனாலும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவரது அரசியல் பார்வை மற்றும் அவரது வியூகத்தை மிகவும் ஆழமாக ஆராய்ந்தபோது பயங்கரமான உண்மையை தான் உணர்ந்ததாகவும் தலதா அத்துக்கோரள சுட்டிக் காட்டினார்.

விசேட ஊடக அறிக்கையொன்றை விடுத்தே தலதா அத்துக்கோரள இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எந்த பதவியும், சலுகையும் வேண்டாம் என்றும், மேற்கூறிய எதிர்கால அபாயங்கள் குறித்து நாட்டுக்கும் மக்களுக்கும் தெரிவிக்க விரும்புவதாகவும் அவர் தனது அறிவிப்பில் விபரித்துள்ளார்.

இது பலருக்கு ஏற்கனவே அறிந்திருந்தும் தமது சொந்த நலனுக்காக தெரியாதது போல் பாசாங்கு செய்வது ஆபத்தான விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆபத்தான விடயமொன்றை நான் அண்மையில் நாட்டுக்கு வெளிப்படுத்திய போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக நான் நியமிக்கப்படவுள்ளதாக பல்வேறு ஊடகங்கள் ஊடாக இந்த நாட்களில் அடிக்கடி பரப்பப்பட்டு வருகின்றது. இது எந்த வகையிலும் யாருக்கு என்ன பதவி என்று விவாதிக்கும் ஒரு சாதாரண சந்தர்ப்பம் அல்ல.

மூன்று வாரங்களில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான நிகழ்வு தொடர்பாக முழு நாட்டினதும் கவனம் செலுத்த வேண்டிய மிக ஆபத்தான விடயத்தை அன்று நான் வெளிப்படுத்தினேன். இது பதவி அல்லது சிறப்புரிமை தொடர்புபட்ட சிறிய விடயம் அல்ல.

இதற்கு முன்னர் அமைச்சரவை அமைச்சர் பதவிகள் உட்பட பல பதவிகளை வகித்துள்ள எனக்கு தற்போது எந்த பதவியும் சலுகையும் வேண்டாம். மேற்கூறிய எதிர்கால ஆபத்து குறித்து இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

எனவே, ஒட்டுமொத்த நாட்டின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த ஊடக அறிவிப்பை வெளியிடுகிறேன்.

கோட்டாபயவின் இரண்டாம் பாகம் எப்படி உருவாகி வருகிறது என்பதை நான் உணர்ந்தவுடன், அதை நான் உங்களுக்கு வெளிப்படுத்தினேன்.

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையை வெளிப்படுத்தி, அதிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கூட இராஜினாமா செய்தேன்.

அந்த அவல அனுபவத்தை இந்த நாட்டு மக்களால் மீண்டும் தாங்க முடியுமா? சஜித் பிரேமதாசவுடன் எனக்கு தனிப்பட்ட பிரச்னை இல்லை.

ஆனால் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவரது அரசியல் பார்வை மற்றும் அவரது வியூகத்தை ஆராயும் போது நான் உணர்ந்த உண்மை மிகவும் ஆபத்தானது என்பதை உடனடியாக மக்களுக்குச் சொல்ல வேண்டும். மீண்டும் இவ்வாறான ஒரு ஆபத்தான நிலைக்கு இந்த நாட்டை யாரும் இழுத்துச் செல்லாமல் எப்படியாவது தடுப்பது எனது பொறுப்பு. இத்தகைய பேரழிவிலிருந்து இந்த நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும்.

எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் வெறும் பிரசார அலைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் வேட்பாளர் ஒரு நாட்டை ஆள முடியுமா என்பதை ஒரு முறை அல்ல பல இலட்சம் முறை யோசனை செய்ய வேண்டும். இது ஒரு தலைமைத்துவ பயிற்சி அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் தலைமைக்காக யாரும் முயற்சி செய்ய வேண்டிய நேரம் இதுவல்ல.

எனவே, இன்னொரு கோட்டாபயவின் முதிர்ச்சியற்ற நிலைக்கு இந்நாட்டு மக்கள் பலியாகிவிடக் கூடாது. இன்று பல அரசியல்வாதிகளுக்கு இது பொருந்தாது, ஏனென்றால் அவர்கள் அனைவரும் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரல்களின்படி செயல்படுகிறார்கள் மற்றும் நாட்டைப் பற்றியோ மக்களைப் பற்றியோ கவலைப் படுவதில்லை. அதற்கான ஆதாரம் உள்ளது.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இனிய பிரசாரங்களை மாத்திரம் கொண்டு நாட்டையும் மக்களையும் ஏமாற்றும் எவருடைய பேச்சையும் செவிமடுக்காமல் எமது நாட்டை நிலையான சமூக பொருளாதார அரசியல் மட்டத்திற்கு உயர்த்தக்கூடிய தலைவரை தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என குறிப்பிடப்பட்டது. (அ)

# வைத்தியசாலைகள் கட்டமைப்பில் தரமற்ற மருந்துகள் எதுவும் இல்லை

### நோயாளர் அச்சமின்றி பயன்படுத்தலாம்

கொழும்பு, செப். 01

அரசாங்க வைத்தியசாலைகள் கட்டமைப்பில் தரமற்ற மருந்துகள் எதுவுமில்லையென சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தில் எந்த வகையிலும் இடமில்லையெனவும், அரசாங்க வைத்திய சாலைகளினால் வழங்கப்படும் மருந்துகளை நோயாளிகள் அச்சமின்றி பாதுகாப்பாக பயன்படுத்த முடியுமென்றும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அந்த அமைப்பில் இலங்கை உள்வாங்கப்பட வேண்டுமென இந்திய அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கமைய அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவோம் என்று நம்பினோம். அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இலங்கைக்கு மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டால், மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையினால் பதிவு செய்த பின்னரே மருந்துகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படும்.

இரண்டாவது விடயம் இலங்கையில் கடந்த ஒரு வருடமாக பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வைத்தியர்களால் அடையாளம் காணப்பட்ட சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட 862 மருந்துகள் இலங்கையின் மருந்துகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு மருந்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

"ரமேஷின் மருந்து இறக்குமதியை ஜனாதிபதி இடைநிறுத்தியுள்ளார்" என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது. இதில் எந்தவித அடிப்படையும் இல்லை. அத்தகைய நடவடிக்கையும் இல்லை. அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. மக்களுக்கு தேவையான மருந்துகளை முடிந்தவரை வழங்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்ய இந்தியாவிலிருந்து எந்த நிறுவனமும் தெரிவு செய்யப்படவில்லை. அப்படி ஒரு நிகழ்வு நடந்தால், அது மருந்து ஒழுங்குறுத்தல் அதிகார சபையில் பதிவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். பதிவு செய்யப்படாத மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதில்லை.

இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இரு அரசாங்கங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இலங்கை மருந்துக் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருக்கின்றேன். நான் அந்த நிறுவனத்தில் வேலை செய்யவில்லை - என்றார். (அ)

## முஸ்லிம் கட்சிகளுடன் அஜித் டோவல் சந்திப்பு

கொழும்பு, செப். 01

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை பிரதிநிதிப்படுத்தி அதன் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அமீர் அலி ஆகியோரும் பங்குபற்றினர்.

இதன்போது தங்களுடைய இரு கட்சிகளும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க முடிவு எடுத்த பின்னணியில் இலங்கையில் விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 90 வீதமான முஸ்லிம் மக்கள் நிச்சயமாக சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிப்பார்கள் என்ற விடயத்தை எடுத்துரைத்துள்ளனர்.

எதிர்காலத்தில் புதிதாக உருவாக்கப்படும் சஜித் பிரேமதாசவின் அரசாங்கத்தில் தாங்கள் முக்கிய பொறுப்புகள் வகிப்போம் என்றும் ஆகவே புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கைகள் நிச்சயமாக இந்தியாவின் நேச சக்திக்கு முரணாக இருக்கமாட்டாது என்றும் அவர்கள் கூறினர்.

இவர்களால் சொல்லப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக இந்தியாவும் ஒரு சாதகமான நிலைப்பாட்டில் இருப்பதாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இதன்போது குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.